Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 225

ஞாயிற்றுக்கிழமை 09 ஜூலை 2023

ஆனி 24 ... 2054

# பிரதமர் மோடிக்கான கடிதம் சம்பந்தனின் பரிசீலனையில்!



யாழ்ப்பாணம், ஜூலை 9

இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் சில இணைந்து அனுப்பவுள்ள கடிதம், சம்பந்தனின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். »16

# அனைத்து மாவட்டங்களிலும் கறுப்பு ஜூலை நினைவுநாள்!

## தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும்; மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இம்முறை கறுப்பு ஜூலை நினைவேந்தல் முன்னெடுக்கப்படும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜா நேற்றுத் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் நேற்று இடம் »14

பதவிக்காலம் முடியும் வரை

## வீட்டில் போட்டியிட்டவர்கள் தமிழரசின் உறுப்பினர்களே

மாவை நேற்றுச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9

தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட அனைவரும் தத்தம் பதவிக்காலம் முடியும் »15

## இரண்டாம் பாதியில் பொருளாதார மீட்சி!

கொழும்பு, ஜூலை 9

நாட்டின் பொருளாதார மீட்சியை வருடத்தின் இரண்டாம் பாதியில் காணலாம். எதிர்காலத்திலும் நாட்டின் »14

## நவாலி படுகொலை: இன்று நினைவுநாள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இலங்கை விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 147 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட 28ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். 1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகள் காரண »14

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய

## எச்சரிக்கை எதற்கும் செவிசாய்க்கவில்லை!

அழிவுக்குக் காரணமும் அதுவே மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

இலங்கை முகம்கொடுத்த 'பொருளாதாரப் பேரழிவு' குறித்து நான் முன்கூட்டியே எச்சரித்தேன். »14

## நீதித்துறைக்கு வீரசேகர பாரதூரமான அச்சுறுத்தல்!

தமிழ் எம்.பிக்கள் கண்டனம்

கொழும்பு, ஜூலை 9

நாடாளுமன்றத்தில் வைத்து, முல்லைத்தீவு நீதிபதியை எச்சரிக்கும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்துக்கள் நீதித்துறைக்கான பாரதூரமான அச்சுறுத்தல் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு முரணான »15

## போலி 'லைசென்ஸ்' தயாரித்த இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 9

போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் தயாரித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் செல்ல இருப்பவர்களுக்கு உடனடியாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுத் தரப்படும் »16

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

# ஜனாதிபதி வேட்பாளர் பெரமுன உறுப்பினரே!



சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்பது ஆளும் தரப்பு உறுப்பினர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல »15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிக்கத் தண்ணீரின்றி தவிக்கும் தென்மராட்சி

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



**தென்மராட்சி, ஜூலை 9**
**தற்போது நிலவும் வரட்சியான காலநிலையால் தென்மராட்சிப் பிரதேசத்தில் 25 க்கும் மேற்பட்ட கிராமஅலுவலர் பிரிவுகளில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தூர இடங்களுக்குச் சென்றே கொள்கலன்களில் குடிதண்ணீரை எடுத்து வரவேண்டியுள்ளது என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில்,
இந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகளில் நீர் வற்றிச் செல்கின்றது. அதனால் குடிதண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர்த் தேவைக்காக தூர இடங்களுக்குச் சென்றே கொள்கலன்களில் பெற்று வரவேண்டியுள்ளது.
கடந்த காலங்களில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாகனங்கள் மூலம் தொட்டிகளில் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு குடிதண்ணீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டது.
இந்த வருடம் இன்னமும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.
இதுகுறித்து பிரதேச செயலகத்திடம் பலமுறை வினவியபோதும் குடிதண்ணீர் விநியோகத்துக்கு நிதி கிடைக்கவில்லை. நிதி கிடைத்ததும் நீர் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்றே கூறப்படுகிறது.
இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எமது குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்யவேண்டும் - என்றனர். (ச-ரி3-9)

## மஹோற்சவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 9
மயிலிட்டி ஆதிமயிலிட்டி காசிபூதராயர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறவுள்ளது.
திருவிழா தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும்.
இந்தக் கலந்துரையாடலில் அனைத்து அடியார்களையும் திருவிழா உபயகாரர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)



## போதைமாத்திரையுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 9
போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.
புத்தூர் மந்திரி மனைப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து 3 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.
சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-23)

# மன்னாரில் ஒதுங்கிய கப்பல் மீட்பதற்கு வருகிறது இந்தியா

## கடற்படை தெரிவிப்பு

மன்னார், ஜூலை 9
மாலைதீவிலிருந்து இந்தியாவின் தூத்துக்குடி நோக்கி, கொள்கலன் தாங்கியை இழுத்துக்கொண்டு பயணித்த கப்பலே மன்னார் பேசாலை நடுக்குடாப் பகுதியில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கியது என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.
அந்தக் கப்பலில், 11 பணியாளர்கள் உள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்தியாவிலிருந்து மாலைதீவுக்கு பொருள்களைக் கொண்டுசென்ற குறித்த கொள்கலன் தாங்கி, அங்கிருந்து மீண்டும் கப்பல் ஒன்றின் மூலம் இந்தியாவுக்குக் கொண்டு செல்லும் வழியில் இலங்கைக் கடற்பரப்பில் கரைதட்டியுள்ளது.
87 மீற்றர் நீளமான குறித்த கொள்கலன் தாங்கி எந்தவித பொருள்களுமின்றியே பயணித்துள்ளது.
இந்தக் கொள்கலன் தாங்கியை மீட்பதற்காக இந்தியாவிலிருந்து கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளது.
அதன்பின்னரே எவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கலாம் எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## சுகாதாரப் பரிசோதகர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 9
சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களில் கடமையாற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான இடமாற்றப் பட்டியல் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
அதன்பிரகாரம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்துக்கு சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கடமையாற்றும் பொ.மனோகரன் நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சியாக நான்கு வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் தெரிவித்துள்ளது. (ச-9)



# வவுனியா விளாத்திக்குளம் வீதி: பாவனைக்கு வழங்க இணக்கம்

வவுனியா, ஜூலை 9
வவுனியா - ஓமந்தை பெரிய விளாத்திக்குளம் பிரதான வீதியை மக்கள் பாவனைக்கு வழங்க புகையிரதத் திணைக்களத்தின் பொறியியலாளரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வவுனியா பெரிய விளாத்திக்குளம் பிரதான வீதி ஓமந்தை புகையிரத நிலையம் அமைப்பதற்காக நிரந்தரமாக மூடப்பட்டது. அதனால் மக்கள் பல கிலோமீற்றர் சென்றே கிராமத்துக்கு வரும் வகையில் பிறிதொரு பாதை வழங்கப்பட்டது.
எனினும் எமக்குப் பழைய பாதையே வேண்டுமெனக் கோரி மக்கள் போராட்டங்களை நடத்தியதுடன் ஓமந்தைப் பொலிஸாரூடாக நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.
இந்தநிலையில் வழக்கு விசாரணையின் பிரகாரம் குறித்த வீதியை வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிபதி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.
புகையிரதத் திணைக்களப் பொறியியலாளர் மற்றும் கிராம மக்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் ஆகியோருடன் மக்களின் இலகுவான பயணத்துக்கு ஏதுவான நடவடிக்கைகள் தொடர்பில் புகையிரதத் திணைக்களத்தினரிடம் கலந்துரையாடினார். அதனையடுத்து புகையிரதத் திணைக்களத்தின் பொறியியலாளர் கிராமமக்கள் கோரிய இடத்தில் முச்சக்கரவண்டிகளுக்குட்பட்ட வாகனங்கள் செல்லக்கூடிய பாதை அமைத்துத் தருவதாகவும் பாரஊர்திகள் தற்போது பயன்படுத்தப்படும் பாதையினூடாகவே பயணிக்க வேண்டும் எனவும் இணக்கம் தெரிவித்தார். (ச-10)

## 'விலையுயர்ந்த விதைகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 9
நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வே.முத்தையாவின் 100ஆவது அகவை நிறைவு நாளை முன்னிட்டு கவிஞர் கெங்காஸ்ரான்லி எழுதிய "விலையுயர்ந்த விதைகள்" எனும் கவிதை நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பேராசிரியர் முனைவர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டு உரையை கவிஞர்.ரஜிதா அரிச்சந்திரனும், மதிப்பீட்டுரையை கவிஞர். வைரவநாதன் வசீகரனும், வாழ்த்துரையை ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் சதா.கனகலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். மேலும் இந்த நிகழ்வில் விருந்தினராக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய-125,27)

## கட்டுடையில் மாடு திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9
மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் வீட்டில் கட்டிவைத்த மாடு களவாடப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திரெட்ஸ்'க்கு 'திரெட்'




நியூயோர்க், ஜூலை 9
பேஸ்புக் நிறுவனத்தின் தாய் நிறுவனமான மெட்டா, ருவிற்றருக்குப் போட்டியாக திரெட்ஸ் என்னும் சமூக வலைத்தளத்தை அறிமுகப் படுத்தியுள்ள நிலையில், ருவிற்றர் சட்ட நடவடிக்கைக்குத் தயாராகிவருகின்றது.
இரு நாள்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'திரெட்ஸ்' சமூக வலைத்தளத்தில் 3 கோடிக்கும் அதிகமானவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.
இது ருவிற்றருக்குப் பெரும் பாதகமாக இருக்கும் என்று சொல்லப்படுகின்றது. இந்தநிலையில் 'திரெட்ஸ்' பயணத்துக்கு வேகத்தடை போட ருவிற்றரின் உரிமையாளர் எலான் மஸ்க் திட்டமிட்டுள்ளார் என்று தெரிகின்றது.
மெட்டா நிறுவனத்துக்கு ருவிற்றரின் மெட்டாவுக்கான சட்டத்தரணியால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.
ருவிற்றரின் ரகசியங்களை அறிந்த முன்னாள் ருவிற்றர் நிர்வாகிகளின் மூலம் தங்களின் தகவல்களைத் திருடி 'திரெட்ஸ்' செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை மெட்டா நிறுவனம் கைவிடவில்லை என்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திரெட்ஸில் ருவிற்றரில் முன்னாள் நிர்வாகிகள் யாரும் பணியாற்றவில்லை என்று மெட்டா நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் பதிலளித்துள்ளார். இதனால் மார்க் ஜுகர்பெர்க் மற்றும் எலான் மஸ்க் இடையேயான மோதல் சூடு பிடித்துள்ளது. (எ-இ)

## வாடகைத் தந்தை

பீஜிங், ஜூலை 9
வடகிழக்கு சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஒரு குளியல் இல்லம் (Bath House) ஒன்றில் வாடகை அப்பா என்ற சேவையை அறிமுகம் செய்துள்ளது.
'Rent a Dad' என பெயரிடப்பட்டுள்ள இந்த சேவை மூலம், தாயுடன் வரும் மகன்களை குளிக்க வைப்பது, கவனித்துக் கொள்வது போன்றவற்றை வாடகை அப்பாக்கள் செய்வார்கள். அதாவது, தாய் குளிக்கும் வரை இந்தக் குழந்தைகளை வாடகைத் தந்தைகள் கவனித்துக் கொள்கிறார்கள்.
அந்தக் குழந்தைகளுக்கு உடை மாற்றிவிடுவது என அனைத்தையும் கவனித்து கொள்கிறார்கள். இந்தச் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. இந்தச் சேவைக்குப் பலர் வரவேற்பு அளித்துள்ளனர். பெண்கள் மட்டும் உள்ள பகுதிகளில், சிறுவர்கள் நுழைவதைத் தடுக்க இந்தச் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
ஒரு பெண் தன் மகனுடன் இங்கு வந்தால், தன் மகனை வாடகை தந்தை என அழைக்கப்படும் நபரிடம் ஒப்படைத்து, நீச்சல் குளத்தில் சுதந்திரமாக நீந்தி மகிழலாம். வாடகைத் தந்தை அதுவரை உங்கள் மகனைக் கவனித்து, குளிப்பதற்கு அழைத்துச் செல்வார் என்று அந்த குளியல் இல்லம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆண் மற்றும் பெண் சிறுவர்களுக்கான தனித்தனி அறைகளையும், உணவு, பானங்கள், மசாஜ்கள், பொழுதுபோக்கு மற்றும் பிற வசதிகளை அனுபவிக்கக்கூடிய பகுதியையும் இந்தச் சேவை வழங்குகிறது. (எ-இ)

## பணக்கார பிச்சைக்காரன்

புதுடில்லி, ஜூலை 9
உலகின் பணக்கார யாசகர் ஒருவர் இந்தியாவின் மும்பை நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். மும்பை வீதிகளில் யாசகம் பெறும் பாரத் ஜெயின் என்ற இந்த யாசகரின் சொத்து மதிப்பு 7.5 கோடி இந்திய ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவரது மாத வருமானம் 60 ஆயிரம் இந்தியா ரூபாவிலிருந்து 75 ஆயிரம் இந்திய ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது.
மும்பையில் சொந்தமாக இரு மாடிக் குடியிருப்பு வீடும், இரண்டு கடைகளும் இருக்கின்றன. அவற்றின் பெறுமதி 1.2 கோடி இந்திய ரூபாவாகும். அவற்றின்மூலம் 30 ஆயிரம் ரூபா மாதாந்த வாடகைகளும் பெற்று வருகின்றார். (எ-இ)

## ஜப்பானின் மீனுக்குத் தடை

கொழும்பு, ஜூலை 9
பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜப்பானிய மாகாணங்களில் ஐந்தில் ஒரு பகுதியிலிருந்து கடலுணவை இறக்குமதி செய்வதை சீனா இடை நிறுத்தியுள்ளது. ஜப்பான் ஃபுகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீரை கடலில் வெளியிடத் தொடங்கிய பின்னர் சீனாவின் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஜப்பானின் கடல் உணவு ஏற்றுமதியின் மிகப்பெரிய இறக்குமதியாளராக சீனா உள்ளது. இந்த நிலையில் ஜப்பானின் 10 மாகாணங்களில் இருந்து கடலுணவுக்குத் தடை விதித்துள்ளது சீனா . (எ-இ)

# பதவி துறந்த மார்க்

நியூயோர்க், ஜூலை 9
நெதர்லாந்து நாட்டின் பிரதமர் மார்க் ருடி தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.
நெதர்லாந்து நாட்டில் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டணி அரசில் மார்க் ருடி பிரதமராகச் செயற்பட்டு வருகிறார்.
புலம்பெயர்ந்தோர் தொடர்பான சட்டத்திருத்தம் நெதர்லாந்து நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தம் தொடர்பாக கூட்டணிக் கட்சிக்குள் ஆதரவும் எதிர்ப்பும் நிலவி வந்தது.
இந்த விவகாரத்தில் கூட்டணிக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டு வந்த நிலையில் நெதர்லாந்து பிரதமர் பதவியிலிருந்து நேற்று மார்க் விலகியுள்ளார்.
பிரதமர் மார்க் பதவி விலகிய நிலையில், 150 தொகுதிகளைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடைபெறும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்** : திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. லாபம் குறைவாகவே கிடைக்கும்.

**சிம்மம்:** பொறுமையுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்** : அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் . பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுமியின் தாக்குதலில் 10 வயதுச் சிறுவன் சாவு

கொழும்பு, ஜூலை 9

விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சிறுமி ஒருவரால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான இரண்டு சிறார்களும் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

12 வயதான சிறுமி ஒருவரால் 10 வயதான சிறுவனின் நெற்றிப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த சிறுவன் நீர்கொழும்பு மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட 12 வயதான சிறுமியைக் கைது செய்து நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர் பாதுகாப்புக் காரணமாக சிறுவர் நிலையமொன்றில் தடுத்து வைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சிறுமியின் தாய் வெளிநாட்டில் உள்ளார் எனவும், அவரது தந்தை வேறு திருமணம் முடித்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-22)






# மதத்தலைவர்களை அரசியலில் தாக்கம் செலுத்த விடக்கூடாது!

*அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 9

பாலியல் சுதந்திரம் என்பது பலாத்காரம் இல்லாத சுயவிருப்ப தனிப்பட்ட விவகாரம். பாலியல் விவகாரத்தில் அகப்பட்ட சுமன தேரர் சம்பவத்தில் தொடர்புபட்ட பெண்களைப் படம்பிடித்து தாக்கியமை குற்றமாகும். அதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேநேரம் மதத் தலைவர்களை அரசாங்கத்தின் கொள்கை அல்லது செயற்பாடுகள் மீது தாக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் சீற்றம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பௌத்தகுருமார்கள் கடந்த காலங்களில் பொதுமக்களுக்கு, அரச அதிகாரிகளுக்கு, பொலிஸாருக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்ட சம்பவங்கள் பதிவாகின.

தற்போது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளிலும் சிக்கியுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அவர்களுக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வன்முறைகளே எங்கள் முதல் வெளிப்பாடு என்பதை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மதம் அல்லது மதத் தலைவர்களை தனியாக வைத்திருக்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்தின் கொள்கை அல்லது செயற்பாடுகள் மீது தாக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது- என்றார். (ச-இ)

# மானிப்பாயில் மாடு திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வீட்டில் கட்டிவைக்கப்பட்ட மாட்டை இனந்தெரியாதோர் திருடிச் சென்றுள்ளரென மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் சங்குவேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ச-125)

# தேரரையும், இரு பெண்களையும் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூலை 9

நவகமுவ பிரதேசத்தில் தேரர் ஒருவரும் இரண்டு பெண்களும் குழுவொன்றால் தாக்கப்படும் காணொலி சமூக ஊடகங்களில் பரவி வரும் நிலையில், அது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

விகாரை ஒன்றின் பிக்கு ஒருவரும், இரண்டு பெண்களும் அறையொன்றில் குழுவொன்றால் பொல்லால் தாக்கப்படும் காணொலி தற்போது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுபேசுபொருளாகியுள்ளது. காயமடைந்த தேரர் மற்றும் பெண்ணொருவர் சிகிச்சைக்காக நவகமுவ பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் கடுமையாக தாக்கியமை பெரும் குற்றமாகும். எவரும் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது. குறித்த குழுவினர் தொடர்பில் உடன் விசாரணை மேற்கொண்டு கைது செய்யப்பட வேண்டும். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசின் ஜனநாயக விரோதம் எதிர்த்துக் குரலெழுப்புவோம்!

## ஐ.ம.ச. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 9

**அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடி இதுவரை 40க்கும் மேற்பட்ட வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ஆட்சி முதல் இன்று வரை மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டில் 40 லட்சம் பேர் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இது மிகவும் பாரதூரமான நிலைமை.

மூன்றுவேளை உணவு உட்கொண்டவர்கள் தற்போது இரண்டு வேளையாக மாற்றியுள்ளனர். இந்த நிலைமை மோசமடையுமே தவிர தீர்வுக்கு வழியேற்படுத்தப்படவில்லை.

நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதைவிடுத்து தேவையற்ற வேலைகளை அரசு செய்து வருகின்றது.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கெதிராக போராடி வரும் நாம், இதுவரை 40 க்கும் மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளோம். மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் போராடுவோம் - என்றார். (ச-22)

## குழந்தைகளின் திரிபோஷா வழங்குவதில் சிக்கல் நிலை

ஆறு மாதம் முதல் 3 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவது தொடர்பான முறைமைகளிலுள்ள முரண்நிலைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனம் அறிக்கையொன்றினூடாக இதைத் தெரிவித்துள்ளது.

அதில் எமது தொழிற்சாலைப் பணியாளர்கள், உச்சபட்ச செயற்திறனுடன் திரிபோஷா உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆறு மாதம் முதல், 3 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு, திரிபோஷா வழங்குவது தொடர்பான முறைமைகளில் உள்ள முரண்நிலை குறித்து சுகாதார அமைச்சுடன் பேச்சு நடத்தப்பட்டது.

ஆயினும் சுகாதார அமைச்சு உரிய தீர்வு வழங்காமையால் குழந்தைகளுக்கு, திரிபோஷாவை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-இ)



## பால் உற்பத்தியை மேம்படுத்த வலுவான திட்டம் நடைமுறை!

### அமைச்சர் ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

பால் உற்பத்தித் துறையை ஊக்குவித்து நாட்டு மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்யவும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வலுவான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பால் உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதன் மூலம், பால் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், நாட்டு மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடிந்துள்ளது. கடந்த காலங்களில் விவசாய அமைச்சு பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நாட்டின் பால் மற்றும் புரதத் தேவைகளை முதன்மையாகப் பூர்த்தி செய்வதே தமது நோக்கமாகும்.

அதற்கென அரசாங்கம் வலுவான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்தியுள்ளது - என்றார். (ச-இ)

## விபத்து!

கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் 5 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான். தந்தை படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கொழும்பு, மஹரகமவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

வேகமாகப் பயணித்த காரும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற தந்தையுடன், அவருடன் பயணித்த 5 வயது மகனும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது. காரின் சாரதியை கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

## மிளகாய்த் தூள் விசிறி பணம் அபகரிக்க முயற்சி

கொழும்பு, ஜூலை 9

உப அஞ்சல் அலுவலகத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத நபரொருவர் அங்கு கடமையில் இருந்த பெண் தபால் அதிபர் மீது மிளகாய்த்தூளை வீசி தாக்கிவிட்டு பணத்தை அபகரிக்க முயன்ற சம்பவம் ஒன்று கொடவில, மெதகொடவில பகுதியில் உள்ள உப அஞ்சல் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்துக்கொண்டு மெதகொடவில உப அஞ்சல் அலுவலகத்துக்கு வந்த சந்தேகநபர் ஏதோ தகவல் கேட்பது போல் பாசாங்கு செய்துவிட்டு, கடமையில் இருந்த பெண் அதிகாரியின் முகத்தில் மிளகாய்த்தூளை விசிறியுள்ளார்.

அங்கிருந்த பணப்பையை குறித்த நபர் திருட முயன்றுள்ள நிலையில், அங்கு கடமையில் இருந்த தபால் அதிபர் துரிதமாகச் செயற்பட்டு குறித்த நபருடன் போராடி பணப்பையை மீட்டுள்ளார். அதையடுத்து சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வெலிகம உடுகாவ பிரதேசத்தில் வசிக்கும் அஞ்சல் நிலைய தபால் அதிபர் சிகிச்சைக்காக மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொடவில பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## பொலிஸ்மா அதிபராக மீண்டும் விக்ரமரத்ன!

கொழும்பு, ஜூலை 9

பொலிஸ்மா அதிபராக சி.டி. விக்ரமரத்னவுக்கு மீண்டும் 3 மாத காலத்துக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபராகவிருந்த சி.டி. விக்ரமரத்ன கடந்த மார்ச் 25ஆம் திகதி ஓய்வுபெற்றிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 3 மாத காலத்துக்கு அவரின் சேவையை நீடித்தார். இந்தச் சேவை நீடிப்பு கடந்த ஜூன் 25ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்தநிலையில் மேலும் 3 மாத காலத்துக்கு சேவை நீடிப்பு அவருக்கு வழங்கப்படவுள்ளதெனவும் இரு தினங்களில் அவர் மீள கடமைக்குத் திரும்புவாரெனவும் பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் வெளிநாட்டு வேலைக்காகச் சென்றவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்த 50 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளதாவது:-

இந்த வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் பேரடங்கிய தொழிலாளர்கள் கொண்ட குழுவொன்று வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 3 லட்சத்து 11 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைகளுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

முக்கியமாக கட்டார், குவைத், சவூதிஅரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் நிலை காணப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், ருமேனியாவிலும் ஜப்பானிலும் அதிக வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகையால் இலங்கையர்கள் அங்கு செல்லும் போக்கு அதிகம் காணப்படுகின்றது.

திறமையான தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்ப நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேனல்ல விஷம்!

வவுனியாவில் மிகப்பிரமாண்டமான சீனித்தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காகவும், அதற்கான கரும்புத்தோட்டங்களை ஏற்படுத்துவதற்காகவும் சுமார் 75ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவித்து உத்தரவிட்டிருக்கின்றது அமைச்சரவை. இந்தச் சீனித்தொழிற்சாலை வடக்கு மாகாணத்துக்கும் அதன் அபிவிருத்திக்கும் பிரமாண்டமானதொரு வரப்பிரசாதம் என்பதான மாயைகள் கடந்த சில வாரங்களாகவே இங்குள்ள மக்கள் மத்தியில் வலிந்து திணிக்கப்பட்டுவந்த நிலையில், அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தக் கட்டுமானங்களுக்கும், காணி வழங்கலுக்கும் பச்சைக்கொடி காட்டியிருக்கின்றது அமைச்சரவை.

இலங்கையின் பொருளாதாரம் சிதிலமடைந்து – நாட்டின் வருவாயும் வர்த்தகங்களும் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற நிலையில், இந்தப் பொருண்மிய நலிவை நேர்படுத்தவும் சீர்படுத்தவும் புதிய புதிய வர்த்தகங்கள் உட்கட்டுமானங்கள் தொழிற்சாலைகள் மிகமிக அவசியமானவைதான். அதைக் கொஞ்சம்கூட மறுப்பதற்கில்லை. ஆனால், அவ்வாறான கட்டுமானத்தையும் தொழிற்சாலையையும் மேற்கொள்கின்றபோது வள இருப்பு, வளத்தின் தேய்வு, அந்தக் கட்டுமானங்கள் தான் சாரப்போகின்ற சமூகத்துக்கு ஏற்படுத்தும் நன்மைகள் மற்றும் தீமைகள் என்பவற்றைச் சீர்தூக்கிப் பரிசீலனை செய்து அதன் தாற்பரியங்களை உணர்ந்த பின்னரே அவை அந்தந்தப் பிரதேசங்களில் தேவையா? அமைவுபெற வேண்டுமா? என்பதான முடிவுகளுக்கு வரவேண்டும். ஆனால் மக்களையும், அவர்களின் உயிரையும்கூட விற்றுச்சுட்டு, டொலரைக் கொண்டுவந்து, கஜானாவை நிரப்பினால் போதுமென்று செயற்படும் ரணில் அரசாங்கம், வவுனியாவில் சீனித்தொழிற்சாலை அமைப்பதன் பாரதூரமான விளைவுகளைச் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

சீனித்தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுகின்றது என்றால் அதற்கு முதலாவதாக, தொழிற்சாலை அமைவுறும் பிரதேசத்தின் தண்ணீர்வளம் தொடர்பில் சிந்திக்கப்பட வேண்டும். ஒரு கிலோ சீனி உருவாக்கப்படுவதற்கு சுமார் ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான தண்ணீர் தேவை என்கின்றனர் வல்லுநர்கள். எனில், வவுனியாவில் அமைக்கப்படும் தொழிற்சாலையின் பிரமாண்டத்தை வைத்துப் பார்க்கின்றபோது நாளொன்றுக்கு பல லட்சம் லீற்றர் தண்ணீர் நிச்சயம் தேவைப்படும். அவ்வாறெனில் இந்தத் தண்ணீர் மூலத்தை எங்கிருந்து இந்தத் தொழிற்சாலை உறிஞ்சப்போகின்றது என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. ஒப்பீட்டளவில் வவுனியாவில் குளங்கள் அதிகம் இருந்தாலும் இவ்வாறான பெரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அளவுக்கான பிரமாண்ட நீர்க்கட்டுமானங்களும் வல்லமையும் இல்லை. ஆக, வவுனியாவின் நிலத்தடி நீர் இந்தத் திட்டத்தின் நாளாந்த இயங்குகைக்காக உறிஞ்சப்பட்டால் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. அவ்வாறான நிலையொன்று ஏற்படுமாயின் எம் கண்முன்னே வவுனியாவிடமிருந்து அதன் நீர்வளம் பிரித்தெடுக்கப்பட்டு பாலைவனமாக அது மாற்றம்பெறும்.

கஞ்சா பேராபத்தான போதைப்பொருளாக இருந்தாலும், இலங்கையின் கடன்களை அடைப்பதற்காக 'தொழில்முறையில்' அதைப் பயிரிடும் நடவடிக்கைகள் தற்போது பூர்வாங்க அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே கஞ்சாவால் வரும் ஆபத்தம்சங்களை விடவும் எதைச் செய்தாவது – மக்களைக் கொன்றாவது கடனை அடைத்துவிட வேண்டும் என்பதில் அரசாங்கம் காட்டுகின்ற முனைப்புத்தான் பட்டவர்த்தனமாகின்றது. அதுபோன்றுதான் வவுனியா சீனித்தொழிற்சாலை விடயமும். சீனியென்பது நீரிழிவு போன்ற தீரா நோய்களின் மூலாதாரமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. இவ்வாறிருக்கையில் சீனியின் உற்பத்திக்காக தொழிற்சாலையை பிரமாண்டமாக நிறுவுவதென்பது நிச்சயம் பிற்போக்கான சிந்தனையே. பொருளாதாரத்தைக் கட்டமைக்க, கட்டுமானங்களை அமையுங்கள், தொழிற்சாலைகளை நிறுவுங்கள். ஆனால், சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்ற சிந்தனையை ஆழ்மனதில் பதிந்தவர்களாகச் செயற்படுங்கள். சீனியை உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காகத் தண்ணீரைப் பறிகொடுத்துவிட்டு, பின்னர் தண்ணீரை போத்தல்களில் இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டால், அதைவிட இழிநிலை என்றொன்று இல்லை.

நாளொரு நல்வார்த்தை

முயற்சியில்லாதவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை; வெற்றியாளர்கள் ஒருபோதும் முயற்சியை விடுவதில்லை.

- நெப்போலியன் ஹில்




# அரசியல் சீரமைப்பில் தலையிட தேரர்களுக்கு அருகதையில்லை

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூலை 9**

**நாட்டின் அரசியல் மறுசீரமைப்பில் 'இது செய்யலாம்', 'இதைச் செய்யக்கூடாது' எனத் தேரர்கள் இனியும் கூறிக்கொண்டு வரக்கூடாது. முதலில் பௌத்த துறவிகளின் நடத்தை பற்றிய சீர்திருத்தங்களை அவர்களது மதத் தலைவர்கள் சீர்செய்ய வேண்டும். எமக்குத் தேவை எந்த மதமும் அரசியலில் தொடர்புபடாத மதச்சார்பற்ற நாடே.**

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாலியல் சம்பவங்களில் அகப்பட்ட மாகல் கந்தே சுதந்த தேரர், பல்லேகம சுமன தேரர், மட்டக்களப்பில் பொலிஸாரைத் தாக்கிய அம்பிடிய சுமனரத்ன தேரர் என தேரர்களின் நடத்தைப் பிறழ்வுகள் அதிகரித்துள்ளன.

இந்தத் தேரர்களே, சமகாலத்தில் நாட்டில் அரசியல் சீர்திருத்தம் நடைபெறுவதை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை, எப்போதும் எதிர்க்கும் - இனவாதத்தைக் கிளப்பும் அணியில் இருந்துள்ளனர். பௌத்தத்துக்கு உள்ளே பெரும் சிந்தனைக் குழப்பத்தை ஏற்படுத்தும் இந்த நடத்தைப் பிறழ்வுகளில் நாம் தலையிடோம். ஆனால் நாட்டின் தேசிய நடத்தை மற்றும் அரசியல் சமூக சீர்திருத்தம் பற்றிய விவகாரங்கள் என வரும்போது இத்தகையவர்கள் "இது செய்யலாம்" "இதைச் செய்யக் கூடாது" என இனியும் கூறிவர இடமளிக்க முடியாது.

இந்த நாடு மதச்சார்பற்ற நாடாக வேண்டும். அரசியலில் மதச்சார்பற்ற கொள்கையை நாம் முன்னெடுக்க வேண்டும். அதன்மூலம் புரையோடிப் போயுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டலாம்- என்றார். (ச-இ)

# 10 கோடி ரூபா எங்கே? மைத்திரியிடம் கேள்வி

கொழும்பு, ஜூலை 9

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 10 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டபோதும் இதுவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான 7 பேர் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் கடந்த ஜனவரி 12ஆம் திகதி தீர்மானம் மேற்கொண்டு 6 மாதகாலப் பகுதிக்குள் இழப்பீடு வழங்கவேண்டும் என மைத்திரிபாலவுக்கு உத்தரவிட்டது. இழப்பீடு முறையாக வழங்கப்படாவிடின் நீதிமன்றை அவமதிக்கும் செயலாகும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இந்தநிலையில் எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் இழப்பீட்டை வழங்குவதற்குரிய ஆறு மாத காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

10.07.2023

திங்கட்கிழமை

ஆனி 25

சுபநேரம் : 11.58 - 01.28

ராகுகாலம் : 07.28 - 08.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்ள் கப்பல் நட்டஈட்டை மீனவ சமூகத்திடம் பகிருக

## இலங்கை மீனவ தொழிற்சங்கத்துடன் யாழில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாணத்துடன் 15 கடலோர மாவட்டங்கள் இணைந்து மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பாதிப்பால் கிடைக்கும் நட்டஈட்டை மீனவ மாவட்டங்களுக்கு பகிர்தல் ஆகியவை தொடர்பில் அகில இலங்கை மீனவ தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடமாகாண மீனவ சங்கங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ. அன்னராசா, இலங்கைக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளான பேர்ள் கப்பலின் பாதிப்புத் தொடர்பில் வழக்குத் தொடர்வது சம்பந்தமாக கடந்த வாரம் கடற்றொழில் அமைப்பினர் ஒவ்வொரு மாவட்ட மீனவர்களோடும் கலந்துரையாடினர்.

நீர்கொழும்பு சட்டத்தரணி நிமாலனி குணரட்னம் தலைமையில் இந்த வழக்குத் தொடுக்கப்படவுள்ளது.

பேர்ள் கப்பலின் பாதிப்பு வடபகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. கடலாமைகள், திமிங்கிலங்கள் எனப் மிகப்பெரிய உயிரினங்கள் இறந்து கரையொதுங்கின. அத்துடன் மீன் உற்பத்திகளும் குறைவடைந்துள்ளன.

அதற்கமைய அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தோடு கடற்றொழில் சமாசங்களும் இணைந்து செயற்படவுள்ளோம்.

அத்துடன் வடக்குப்பகுதி கடற்பரப்பில் இடம்பெறும் இழுவைமடித் தொழில், சீனாவின் கடலட்டைப் பண்ணை ஆக்கிரமிப்பு, சுருக்கு வலைத் தொழில் ஆகியவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும் - என்றார்.

இதன்போது முதலில் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கை தான் முன்கொண்டு செல்வதென்றும் அதற்கு வடக்குக் கடற்றொழில் சமூகங்கள் ஆதரவளிக்க வேண்டுமென்றும் சட்டத்தரணி நிமாலனி குணரட்ணம் சுட்டிக்காட்டினார். (ச-27)

# சமாதான நீதிவானாக கிராமஅலுவலர்கள்

## வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

கிராமஅலுவலர்களை சமாதான நீதிவானாக நியமிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நிரந்தர் மற்றும் சுறுசுறுப்பான சேவையில் ஈடுபடும் கிராமஅலுவலர்கள் சமாதான நீதிவானாக உள்ளீர்க்கப்படுவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-ரி3)

# இந்திய ரோலர் படகுகளால் வடபகுதி மீன்வளம் அழிவு!

## தமிழக முதலமைச்சருக்கு எடுத்துரைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 9

தமிழ்நாடு மீன்பிடி ரோலர்களால் வடபகுதிக் கடல்வளம் அழிக்கப்படுவது தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைக்கவுள்ளார் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது வடபகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமும் கடல்வளமும் முற்றாக அழிக்கப்படுவதாக மீனவர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தமிழ்நாடு மீன்பிடி ரோலர்கள் ஒரு தடவையில் சராசரியாக 18 கிலோ மீனை பிடித்துச் செல்கின்றன.

தமிழ்நாடு மீன்பிடி ரோலர்கள் வழித்துத் துடைத்து மீனை அள்ளிச்செல்வதால் வடபகுதி மீனவர்களின் இழப்பு அளவிட முடியாதது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# அரபிக்கடல் மீன்பிடிக்கு இந்தியத் தரப்புடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 9

இந்தியாவின் அரபிக் கடல் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதி தொடர்பில இந்திய அரசுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடவுள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். இந்த மாத இறுதியில் புதுடில்லிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இந்தவிடயம் தொடர்பில் இந்தியத்தரப்புடன் பேச்சு நடத்தவுள்ளார்.

பேருவளை, நீர்கொழும்பு, மாத்தறை பகுதிகளிலிருந்து செல்லும் மீன்பிடிப் படகுகள் 400 மைல் தூரம் வரை சென்று மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் அவர்கள் இந்தியக் கடலோரக் காவற்படையினரால் கைதுசெய்யப்படுகின்றனர். மீனவர்கள் கைதைத் தடுக்கும் முகமாகவே இந்தியத் தரப்புடன் பேச்சு நடத்தவுள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-6)

# இரத்தக்காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு!

மாத்தறை, திக்கொடை பிரதேசத்தில் இரத்தக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரென அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இளைஞர் வசிக்கும் வீட்டுக்கு முன் வீதியிலிருந்தே சடலம் மீட்கப்பட்டது. இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-22)

# சீனாவின் கடலட்டையால் அழிவடையும் எம் கடல்வளம்

## தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடலட்டை இனங்களால் எமது பாரம்பரிய மீன் வளத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு அழிவடையும் நிலைமை உருவாகும் என அகில இலங்கைத் தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுத்த ஊடகசந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்குக் கடற்பரப்பில் அட்டைப் பண்ணைகள் விஸ்தரிக்கப்பட்டு சீனா நிரந்தரமாக கால் ஊன்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

உலக வர்த்தகத்தில் ஆதிக்கத்தை வைத்திருக்கும் நாடுகளில் உச்சத்திலிருக்கும் சீனா, எமது கடற்பிரதேசத்தில் தனது வர்த்தக இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சிக்கின்றது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்குஞ்சுகள் மற்றும் அட்டை உற்பத்தியானது எந்தவகையான நோய்களை- நோய்த் தொற்றுகளை உருவாக்குகின்றன.

எமது பாரம்பாரியமான மீன்வளத்துக்கு ஏற்படும் பாதிப்பு என்பவை குறித்த ஆய்வை எவரும் இதுவரை மேற்கொள்ளவில்லை. குறைந்த செலவில் பெரும் இலாபத்தை ஈட்டிக் கொள்வதே அவர்களின் நோக்கமாகும்.

அட்டைப் பண்ணைகளால் கடல்வளத்துக்குப் பாதிப்பு என பல தடவைகள் கடற்றொழில் அமைச்சருக்குத் தெரியப்படுத்தியபோதும் அதனை விரிவுபடுத்தும் செயற்பாடே முன்னெடுக்கப்படுகிறது. எமது பாரம்பரிய கடல் வளத்தை சீனாவின் நிரந்தரக் கடற்பிரதேசமாகமாற்றுவதற்கு முன் அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் - என்றார். (ச-125)

# கண்டி மன்னனுடைய ஆயுதங்கள் ஒப்படைப்பு

கண்டி மன்னன் பயன்படுத்திய ஆயுதங்களை நெதர்லாந்து அருங்காட்சியகம் மீள இலங்கையிடம் கையளிக்கவுள்ளது.

கண்டிமன்னருக்குச் சொந்தமான அவர் பயன்படுத்திய 2 வாள்கள், 2 துப்பாக்கிகள், ஒரு கத்தி மற்றும் பீரங்கி என்பன நெதர்லாந்திலுள்ள அருங்காட்சியகமொன்றில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கண்டி மன்னனின் ஆயுதங்களை குறித்த அருங்காட்சியகம் இந்த ஆண்டு திருப்பி அனுப்பவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதில் பீரங்கியானது டச்சு கிழக்கிந்திய வீரர்களால் 1765 இல் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திறைசேரி உண்டியல்கள் 12ஆம் திகதி ஏல விற்பனை

கொழும்பு, ஜூலை 9

ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மில்லியன் ரூபா மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 12ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக்காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

# ரணிலின் இந்தியப் பயணம் தீவிரமாக நடக்கும் ஏற்பாடு



**கொழும்பு, ஜூலை 9**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ரணில் விக்கிரமசிங்க, கடந்த வருடம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி இந்தப் பயணத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார். அமைச்சர்களான அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் மற்றும் காஞ்சன விஜயசேகர ஆகியோரும் இந்தப் பயணத்தில் பங்கேற்கவுள்ளனர். இந்தப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியத்துவம்மிக்க இருதரப்புப் பேச்சுகளை நடத்தவுள்ளார். (எ-22)

## ஓ.எம்.பி. அலுவலகத்தில் பதிவு செய்ய எதிர்ப்பு!

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் நேற்றுப் பதிவுகளை மேற்கொண்ட நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஓ.எம்.பி. அலுவலகத்தால் அழைக்கப்பட்டவர்களுக்கான பதிவுகள் நேற்றுச் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது காணாமற்போனோரின் உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டபோது அலுவல ஆணையாளர் ரி.ஜோகராஜா, கிளிநொச்சி பிராந்திய இணைப்பாளர் நிசாந்தன் ஜூட் பீரிஸ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி இடையூறு இல்லாமல் செயற்படுமாறு அறிவுறுத்தினர். (ச-27)

# தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

## சுழற்சி முறையில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 9

ஏழாலையில் அமைக்கப்படும் தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் சுழற்சிமுறையிலான கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி வீதியில் மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதியில் சுமார் 100 அடி உயரமான தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோபுரம் அமைக்கப்படுவதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதை நிறுத்தும்வரையில் தினமும் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை சுழற்சி முறையில் தங்கள் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (எ-66)

## குற்றங்களை ஒழிக்க விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 9

மேல் மற்றும் தெற்கு மாகாணங்களில் குற்றங்களை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்று பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும கண்காணிப்பு, வீதிச் சோதனை, திடீர் சுற்றிவளைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்று அதன் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த 11 நாள்களுக்குள் தென் மாகாணத்தில் எந்தவொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் பதிவாகவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் அதிகளவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவான அம்பலாங்கொட உள்ளிட்ட பிரதேசங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போதைப் பொருள் வர்த்தகரான ஸ்டேட்புர தனுஷ்கவின் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உதவியாக இருந்த குடு நிலன்தி என்ற பெண் ஐஸ் ரக போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரேண்ட்பாஸ் பகுதியில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## அர்ஜூன் மகேந்திரனுக்கு தற்போதும் திருமண விழாவா?

### வாசுதேவ ரணிலிடம் கேள்வி

பிணைமுறி மோசடியின் பிரதான சந்தேக நபரான அர்ஜூன மகேந்திரன் திருமண விழாவுக்குச் சென்றுள்ளார். நாட்டுக்குத் திரும்பி வருவார். உதயங்க வீரதுங்கவை போல் தப்பிச் செல்லமாட்டார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 8 வருடத்துக்கு முன்னர் சபையில் உரையாற்றினார்.

8 ஆண்டுகள் கடந்தும் அர்ஜூன மகேந்திரன் நாடு திரும்பவில்லை. அவர் இன்னும் திருமண விருந்தில் பங்குகொள்கிறாரா? - இவ்வாறு இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றல் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் - வாங்கல் மோசடியால் 11 பில்லியன் ரூபா வருவாய் இழக்கப்பட்டுள்ளது என கணக்காளர் நாயகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பிணைமுறி மோசடியில் பிரதான சந்தேகநபராக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்ற பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதாக நல்லாட்சி அரசாங்கமும், 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அவர் நாட்டுக்கு அழைத்து வரப்படவில்லை. பிணைமுறி மோசடி விவகாரத்தில் சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் நாட்டுக்கு வருகை தரவில்லை. ஆனால் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன. மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகளில் இரண்டு வழக்குகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. உதயங்க வீரதுங்க நாட்டுக்கு வந்து நீதிமன்றத்துக்கும் சென்றார், செல்கிறார். ஆனால் அர்ஜூன மகேந்திரன் 8 ஆண்டுகள் கடந்தும் நாட்டுக்கு வரவில்லை. ஆகவே அவர் இன்னும் திருமண விருந்து சாப்பிடுகிறாரா?, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்தியுள்ளதை காலம் நிரூபித்துள்ளது -என்றார். (எ-இ)

## தச்சன்தோப்பில் வெடிபொருள்கள்

கொழும்பு, ஜூலை 9

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி தச்சன்தோப்பில் நேற்றுக் காணியொன்றைச் சுத்தப்படுத்தும்போது மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் உள்ள கிணற்றை காணியின் உரிமையாளர் சுத்தம் செய்யும்போதே மோட்டார் குண்டுகள் இருப்பது அவதானிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதற்கமைய அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-27)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பணிநிலை வேண்டுகை

**வாகனத்தில் பொருட்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்குப் பணியாளர்கள் தேவை.**

விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு **20.07.2023 இற்கு முன்னர் தங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பவும்.**

(CS/25480) AH-1

**Ram Medical**
**154E, Navalar Road, Jaffna.**


## விபத்தில் முதியவர் காயம்



கொடிகாமம், ஜூலை 9

கன்டர் வாகனமும் மோட்டார்சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் தாவளை, இயற்றாலைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது. வரணிப் பகுதியில் இருந்து வேம்பிராய் நோக்கிச் சென்ற கன்டர் வாகனமும், வேம்பிராய் பகுதியில் இருந்து வரணி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் விபத்துச் சம்பவித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கன்டர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார். (ம-159)

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 9

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலைச் சந்தியில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிள் மூலம் விபத்தை ஏற்படுத்தியோர், தப்பிச்சென்றுள்ள நிலையில் அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் கதிர்வேல் (வயது - 66) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மீசாலையில் உள்ள உறவினர் ஒருவருடைய வீட்டுக்குச் செல்வதற்காகப் பேருந்தில் சென்ற முதியவர், வீதியைக் கடக்க முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார்சைக்கிள் அவரைப் பலமாக மோதிவிட்டு, தப்பிச் சென்றுள்ளது.

காயமடைந்த முதியவர் ஓட்டோச் சாரதிகளால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதிலும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தை ஏற்படுத்தியவர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம,125,27)

## மரண அறிவித்தல்



**தோற்றம்: 24.08.1957** **மறைவு : 08.07.2023**

### பத்மநாதன் கதிரவேல்

யாழ். கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் கதிரவேல் நேற்று (08.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் கமலாம்பாள் தம்பதியரின் புதல்வனும், லலிதாவின் அன்புக் கணவரும், சிவலிங்கம், சேகர், பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும், மஞ்சுளா, ராஜலட்சுமி, ஜெயலட்சுமி மற்றும் காலம்சென்ற அமுதவல்லி ஆகியோரின் சகோதரனும், சிவலிங்கம் மற்றும் காலஞ்சென்ற சுப்பையா, சாந்தாராம், விஸ்வநாதன் ஆகியோரின் மைத்துனரும், சுரேஸ்குமார் அவர்களின் மாமனாரும், பத்மினி, ஸ்ரீராம், சுகேன், ஜனகன் ஆகியோரின் தந்தையும், வாலாம்பிகா அவர்களின் மாமனாரும், ரிதுர்ஷன், துவர்ணியா, விசாகன், ரிஷிவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புக்கு:
**0777 122 340, 077 072 0904**
**077 421 9563**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 25492)A-1


## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலம்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர் செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர செய்யலாம். (விலைக் கழிவு உண்டு)

10 வருட உத்தரவாதம் உண்டு (உலகத்தரம் மிக்க Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள்)

**North and East Engineering**
**55 Stanly Road, Jaffna, Srilanka.**
**021 222 2363, 077 524 4177, 077 232 3000**
**www.northandeastengineering.com**



## விற்பனை நிறைவேற்று அதிகாரி
### வவுனியா மாவட்டம்

இலங்கை கம்பஹா மாவட்டத்தில் வேகமாக வளர்ந்துவரும் ஹார்ட் வெயார் ( இறக்குமதி, மொத்த மற்றும் சில்லறை) வர்த்தக முன்னோடியான நிறுவனத்தில் திறமையும், சுயாதீனமாமக இயங்கக்கூடிய திறனும் கொண்ட இளைஞர்கள் விற்பனை அதிகாரி பயிற்சியாளராக இணைந்து கொள்ளலாம்.

**பொறுப்புக்கள்**

- ✓ விற்பனை வியாபார மேம்பாட்டுத் தொடர்புகளைப் பேணல்.
- ✓ புதிய வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொண்டு வியாபாரத்தை மேம்படுத்தல்.
- ✓ வாடிக்கையாளர்களுக்கு விலைமனு சமர்ப்பித்தல். தவணைமுறை மற்றும் வியாபார நடவடிக்கை சம்பந்தமாக அறிவுறுத்தல்.
- ✓ சந்தைப்படுத்தல் காரியாலயத்துக்கு வாடிக்கையாளர் தகவல்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் பண வசூலிப்பு முறையில் தொடர்ந்து ஈடுபடுதல்.
- ✓ சந்தை நிலவரம் மற்றும் வாடிக்கையாளர் தகவல்களைத் தொடர்ந்து அவதானித்து. எதிர்கால சந்தை தொடர்பாக அறிந்திருத்தல்.

**தகைமை**

- ✓ சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேம்பாடு. கள நிலவரம் தொடர்பான அனுபவம்.
- ✓ விண்ணப்பதாரி எழுத்தாற்றல் மற்றும் தொடர்பாடல் திறமை கொண்டிருத்தல் வேண்டும்.
- ✓ கல்வித் தகைமை :- G.C.E (A/L)
- ✓ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் துறையில் சேவையாற்றியிருத்தல் மேலதிக தகைமையாகும்.
- ✓ மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்
- ✓ வவுனியாவில் வசிப்போர் மற்றும் வவுனியாவில் தங்கி வேலை செய்ய விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
- ✓ சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் தேர்ச்சி.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை உறவினர் அல்லாத இரண்டு சிபாரிசாளர்களின் தகவலுடன் விளம்பரம் பிரசுரித்து 10 நாட்களுக்குள் providelanka@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**077 666 0245, 077 737 6308**


## மரண அறிவித்தல்

### திருமதி மனோகரி சுந்தரம்

**தோற்றம்** **14.01.1943**

**மறைவு** **06.07.2023**



யாழ்ப்பாணம் ஐயனார்கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுந்தரம் மனோகரி கடந்த (06.07.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் ஆசாரியின் அன்பு மனைவியும் கந்தசாமி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் சீதேவன் தம்பதியரின் மருமகளும், புனிதவதி, துரையம்மா, காலஞ்சென்ற தங்கவேலாயுதம் மற்றும் காலஞ்சென்ற செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா ஆசாரியார் மற்றும் விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் வெற்றிவேல், யோகமணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், நிர்மலா, பத்மஜெயம் (ஜேர்மனி), கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), செந்தில்செல்வம் (கனடா), பிறேமளா (கனடா), சண்முகலிங்கம் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), சதீஸ்வரன் (கனடா), காயத்திரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, ரஜனி, மனோரஞ்சிதம், மனோ, சிவபாலன், விஜயலட்சுமி, கவிதா, ஜெயதாஸ், பாஸ்கரன் ஆகியோரின் மாமியாரும், துஷ்யந்தி, கீர்த்திகா, சாங்கவி, கௌசிகன், கிருஷா, லுக்சிகா, தரன், லத்திகா, சசின், சஸ்னி, திவ்ஜா, சுஜன், அஸ்வின், லக்ஷன், சாணுஜா, அன்சிகா, சதுர்ஷா, அனோஜன், சாருஜன், ஜெசிந்தன், ஜெனுசன், சஞ்சய், நர்த்தனன், நர்த்தகி, ஆரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயண்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**95/10, ஐயனார் கோவிலடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**நிர்மலா [illegible]**
**074 257 7503**

## மரண அறிவித்தல்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

**அன்னையின் மடியில்** **24.08.1955**

**ஆண்டவர் மடியில்** **30.06.2023**

### தங்கராஜா சௌந்தரராஜன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா சௌந்தரராஜன் அவர்கள் கடந்த (30.06.2023) அன்று கர்த்தருக்குள் இளைப்பாறினார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், திலீப் (பிரான்ஸ்), திலக் (மேற்பார்வையாளர், NST Motors), நர்மதா (Director - Shining Stars Learning Centre, Meesalai, Palai) ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாமினி, இளவரசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷெகான் டொறின்சன், டியான் டொறின்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் குகன் வீதி, நெடுங்குளம் சந்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அரியாலை பூம்புகார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**திலக் (மகன்) 077 6121 643**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 25484)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

லண்டன் வயது 38 கிறிஸ்தவர்
எவ்வித தீய பழக்க வழங்கங்கள்
அற்ற நற்குணம் உள்ள மணமகனுக்கு
நற்குணம் உள்ள மணமகள் தேவை.
அண்மையில் எடுத்த புகைப்படம்
தொலைபேசி இலக்கத்துடன் கீழ்
காணும் ஈமெயில் முகவரிக்கு
தொடர்புகொள்ள வேண்டும்.

E.mail - Sathesmennen@yahoo.com

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்

077 334 1281

## விற்பனைக்கு

பெரிய நாய்க் கூடு
விற்பனைக்குண்டு.

021 222 6845

No.17, விதானையார் வீதி, சுண்டுக்குளி

ஓம்
முருகன்துணை

# சௌள உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த பத்திரிகை

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 24 ஆம் நாள் (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் அமைந்த காலை 9.01 மணிமுதல் 10.31 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புதல்வன்

**சிரஞ்ஜீவி லதுவர்ஷன சர்மா**

அவர்களுக்கு ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் தேவஸ்தான வளாகத்தில் **சௌள உபநயன பிரம்மோபதேசம்** செய்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமரனை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**உபநயன தீக்ஷாகுரு**

முத்தமிழ் குருமணி க்ரியாக்கிரமஜோமி வர்கீசவாரிதி சகலாகசாங்கிரகர்
"சிவாகம கலாநிதி"
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்**
ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ பா. பாலச்சந்திரசர்மா ஸ்ரீமதி சர்வேஸ்வரி தம்பதிகள்
(பாலன் - ஈஸ்வரி)
ஸ்ரீ முருகன் தேவஸ்தானம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
தொடர்பு: 077 740 1714

(in.223966)(N.1)

# உடனடி வேலைவாய்ப்பு

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கும் புதிதாக தொடங்கவுள்ள மின்சாரப் பொருட்களை விற்பனை செய்யும் காட்சியறைக்கும் பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- ✔ கணினி இயக்குநர் / பதிவாளர்
- ✔ கணக்காளர்
- ✔ விநியோகப் பணியாளர்

➤ மேலே குறிப்பிட்ட இரு நிறுவனங்களுக்கும் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.



➤ EPF / ETF மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

➤ ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**ESS Jey Electricals**

No. 342, Stanley Road, Jaffna.
Email address : jatessjey@gmail.com
T.P: 021 221 9059

(CS/51151)AH-1


# திருத்தி வாசிக்கவும்!

உதயன் பத்திரிகையின் ஏழாம் திகதிய பதிப்பில் வெளியான 'முறைகேட்டை வெளிப்படுத்தியதால் ஆசியரை வஞ்சித்த வலயம்' என்ற செய்தியில், அதிபரொருவரின் மணி விழாவுக்கு பழைய மாணவர்கள் நிதி திரட்டியது என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் சிலரே நிதி திரட்டினார்கள் அதற்கு பழைய மாணவர்கள் கேள்வி எழுப்பினார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தைத் திருத்தி வாசிக்கவும். (ம)


## வீடு வாடகைக்கு

ஏழாலை மேற்கு மல்லாகம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் வீடு வாடகைக்குண்டு. 3 அறைகள், சமையலறை மற்றும் குளியலறையுடன் நல்ல சூழலில் அமைந்துள்ளது.

077 622 6395
077 340 5839

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பாண்டியந்தாழ்வு புதிய வீடு ஒருபரப்புக் காணியில் 3 rooms, 2 bath, கிணறு, Tiled. விலை 170 லட்சம். பேசலாம். (No brokers)

074 191 5680

## விற்பனைக்கு

775 L Freezer
விற்பனைக்குண்டு
076 804 5948, 077 497 0678

## ஆண் தமிழ் தட்டச்சாளர் தேவை

யாழ். நகரில் சட்டத்தரணியின் அலுவலகத்தில் மாலை வேளைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் (முழுநாள்) தமிழ் தட்டச்சு செய்வதற்கு ஆண் தேவை.

074 136 4103

## விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்ல விருப்பதால் வீட்டுத் தளபாடங்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு.

077 345 0039
077 348 0039

## வீடுகள் வாடகைக்கு தேவை

யாழ். மாவட்டத்தில் வீடுகள் வாடகைக்குத் தேவை. எப்பாகத்தினரும் தொடர்பு கொள்ளலாம்.

077 345 0039
077 348 0039

## மணமகள் தேவை

அந்தணர் குலம் 31 வயது ரேவதி நட்சத்திரம் செவ்வாய் குற்றம் அற்ற பாற்பண்ணைக்கு உரிமையாளர் மற்றும் பூசகர் ஆன மணமகனுக்கு மணமகள் தேவை.
(சீதனம் பேசித்தீர்மானிக்கப்படும்)
விளம்பர இலக்கம் JF/1046
C/o, உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## யாழ். நகரில் வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் வீடுகள், கடைகள், களஞ்சியசாலைகள் மற்றும் படிக்கும் மாணவர்களுக்கான தனி அறைகள், நாளாந்த, வாராந்த, மாதாந்திற்கான நவீனமயமான வீடுகள், அறைகள் எம்மிடம் வாடகைக்கு உண்டு.

077 345 0039
077 348 0039

## விற்பனைக்குண்டு

மட்டுவிலில் வீட்டு இடிபாடுகள் விற்பனைக்குண்டு.

076 696 4669

(CS/51160)AH-1

## வேலையாள் தேவை

மின் பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை.

- ✔ 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்.
- ✔ மோட்டார் சைக்கிள் License அவசியம்
- ✔ யாழ். மாவட்டத்திற்கு உட்பட்டவர்.

தொடர்புகளுக்கு:
075 590 4041
077 922 5648

## விற்பனைக்கு

- போட்டோ கொப்பி மெசின்
- Sisil குளிர்சாதனப் பெட்டி (Single door)
- உடற்பயிற்சி சைக்கிள்
- முதிரை அலுவலக மேசை
- வேம்பு ஈசிச்செயர்
- ஸ்பிரிங் கட்டில், ரியூசன் மேசைகள் இரண்டு முகட்டு ஓடுகள் மற்றும் பல. (CS/25481)AH-1

076 600 1862
077 922 0595

## தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் விற்பனை நிலையத்துக்கு வேலையாள் தேவை.

➤ கணக்காளர் (ஆண்)

077 040 6905
070 640 6905

(CS/51158)AH-1

## வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள மிக்ஷர் தொழிற்சாலைக்குப் பெண் வேலையாள்கள் தேவை.
(அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விரும்பத்தக்கது).
பொதியிடல் (Packing)

077 920 9507

(CS/51152)AH-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் (V), 1976 இல் பிறந்த விஞ்ஞானப்பட்டதாரி அரச உத்தியோக, திருமணமாகாத மணமகனுக்கு நற்குணமுள்ள தகுந்த குடும்பப்பாங்கான திருமணமாகாத மணமகள் தேவை. (CS/51156)AH

076 667 8996


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 09.06.2023 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் லயன்**
**Dr. பொன்னம்பலம் சண்முகரத்தினம் (JP)**



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


பொதுநூலக வீதி, [illegible], கைதடி. (CS/5476)AH-1

குடும்பத்தினர்

தோற்றம் 26.06.1939 மறைவு 09.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## ஆழ்வார் வீரகத்தி

வடமராட்சி கரவெட்டி மத்தி சம்பந்தர் கடையடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலர் ஆழ்வார் வீரகத்தி அவர்கள் ( வயது 91 ) கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார் -பத்தினி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சித்தர் -சீதேவி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம் (முன்னாள் பிரதம ஆசிரியர், கொழும்பு தினக்குரல்), வசந்தநாயகி, ஜெயபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (முகாமையாளர், லீலா பிறஸ், கொழும்பு), திலகராணி, திலகவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந்தன், நிஷாந்தன், பிரியதர்ஷினி, கிரிஷாந்தன் (லண்டன்), சுவப்னா, அபர்ணா, சௌமியா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, மீனாட்சி, சிதம்பரம் மற்றும் கிருஷ்ணபிள்ளை, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருணாச்சலம், யோகராணி, சின்னம்மா, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரித்திக்கா, திவ்வியன்,தியா, ரோகித், ஆதித் (லண்டன் ) ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் சம்பந்தர் கடையடி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.07.2023) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**T.P: 077 577 4852, 021 226 1607**

(CR 37225) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு 23 . 03 . 1945



உதிர்வு 07 . 07 . 2023

## திருமதி சிறிலங்காதேவி உதயகுமாரன் (லங்கா)

(யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி,
இளைப்பாறிய ஆசிரியை - பதுளை ஸ்பிரிங்வலி பாடசாலைகள்,
பதுளை சரஸ்வதி மத்திய வித்தியாலயம்)

யாழ். வண்ணார்பண்ணை கலட்டி, சீனியர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், பதுளை, அவுஸ்திரேலியா Sydney ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிறிலங்காதேவி உதயகுமாரன் நேற்றுமுன்தினம் (07.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - பாக்கியலெட்சுமி தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - இரத்தினம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், உதயகுமாரனின் ஆருயிர் மனைவியும், ஜெயரட்ணம் (அப்பன் - Sydney), ஜெயகாந்தி (ராசாத்தி - நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேந்திரா (நோர்வே), பகீரதி (ரதி - Sydney) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெய்சன், ஹரேந்திரா, ஹர்சினி, லக்ஸ்மி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஸ்ரீ இந்திரா தேவி (இந்திரா), ஸ்ரீ சுசீலாதேவி (மணி), ஸ்ரீ கமலாதேவி (கமலா), விவேகானந்தன் (கனடா), சகுந்தலாதேவி (குஞ்சு) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும், ராஜராஜேஸ்வரி (ஆச்சி), கணநாதன் (பபா), இரத்தினமலர் (பேபி), தம்பித்துரை, தவநாயகம், கைலாசபதி, வரதாவாணி (வரதா - கனடா), காலஞ்சென்ற கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனி யும், மால்மதி, மதிவதனி, ஜெயமதி, காலஞ்சென்ற லிங்கேஸ்வரன், கஜனி, சண்முகதாஸ், மயூரன், பிரதிபா, கிரிதரன், கிருஷ்ணி ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்ற நவயுகன், சுகாந்தன், சுதாகர், சுபாஸ்கர், கார்த்திகா, நவரோசன் ஆகியோரின் ஆசை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.07.2023) செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியா Sydney இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ACO IN/16850)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 05 . 03 . 1939



இறைவன் அடியில் 06 . 07 . 2023

## பியற்றீஸ் புஷ்பரட்ணம் செல்வநாயகம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பியற்றீஸ் புஷ்பரட்ணம் செல்வநாயகம் அவர்கள் கடந்த (06.07.2023) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான K.S. மனுவேல்பிள்ளை சூசனம்மா மனுவேல்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பற்றிக் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்டன் பற்றிக் செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், ஷாமினி கிளாட்வின் (சுவிஸ்), ரோய் செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிளாட்வின் மரியநாயகம் (சுவிஸ்), தமிழ்செல்வி ரோய் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சவுந்திரநாயகம், தங்கநாயகம், ஆனந்தநாயகம் மற்றும் அமிர்தநாயகம் (கனடா), மெற்றீல்டா (கனடா), கனகநாயகம் (ஜேர்மனி), பேரின்பநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஷெனொன் கிளாட்வின், கெவின் ரோய் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பார்வைக்கு:** Sunday, 09 Jul 2023 10:00 AM - 3:00 PM
Lanka Florists & Funeral Services 162 EW Perera Mawatha, Colombo 00800, Sri Lanka.

**நல்லடக்கம்:** Monday, 10 Jul 2023 10:00 AM
St. Mary's Cathedral Jaffna 8 Grusoult Rd, Jaffna, Sri Lanka.

**தொடர்புகளுக்கு :**

ஷாமினி - மகள் Mobile : +41762557770
ரோய் - மகன் Mobile : +14166245197
சூரி - உறவினர் Mobile : +94773474225
குமரன்- Mobile : +94774076197

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 25481) A-1

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 . 01 . 1950



இறைவன் மடியில் 08 . 07 . 2023

## சரவணமுத்து சிவநேசன்

கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவநேசன் நேற்று (08.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சிவமணி, சிவஞானம், சிவபாதசுந்தரம், கார்த்திகேசு, சிவானந்தன் மற்றும் சிவசோதி, சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவக்குமாரியின் பாசமிகு கணவரும், ஹரிபவன் (பிரதேச செயலகம் -யாழ்ப்பாணம்), அனுசரன் (கனடா), Dr. சாங்கீரணி (யாழ். போதனாவைத்தியசாலை) சாருகேசி (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், இசைவாணி (மக்கள் வங்கி - அச்சுவேலி), யூலி (கனடா), தணிகைக்குமரன் (பொறியியலாளர்), வினோஷ் (முகாமையாளர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹர்ஷிதா, நர்த்தனன், வாதுகன், மெகுலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாவற்குழி, கைதடி.**

(CS/51172)AH-1

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**
**077 864 9546**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலசலகூட குழியிலிருந்து வெடிபொருள்கள் மீட்பு!

## முல்லைத்தீவில் சம்பவம்



முல்லைத்தீவு, ஜூலை 9 முல்லைத்தீவில் மலசலகூட குழியிலிருந்து பெருமளவு வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - அலம்பில் வடக்குப் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் துப்புரவுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டபோதே இந்த வெடிபொருள்கள் அவதானிக்கப்பட்டன. முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் அதனை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளதுடன், வெடிபொருள்களை அகற்றும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-125,19)

# முத்திரை வெளியீடு



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசியப் பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி பாலராணி சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தபால்மா அதிபர் றுவான் சரத்குமார கலந்துகொண்டு தபால் முத்திரைதலையைவெளியிட்டு வைத்தார்.

இதேவேளை கல்லூரியின் மாணவிகளால் 21 வீணைகள் கொண்டு இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

இது இலங்கையில் இரண்டாவது அதிகூடிய வீணை இசைக்கலைஞர்களின் நிகழ்ச்சி எனச் சொல்லப்படுகிறது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தினரால் சில வருடங்களுக்கு முன்னர் 76 வீணைகளுடன் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளதாகவும் அது இலங்கையில் முதலாவது சாதனையாகும். (ய-27)

### அனைத்து...

பெற்றது. இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துவது, மூலக்கிளைகள் மற்றும் தொகுதிக் கிளைகள் என்பவற்றைப் பூரணப்படுத்துதல் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. பல இடங்களிலும் மாவட்டங்களிலும் தமிழரசின் கிளைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சில உறுப்பினர்கள் தெரிவு செய்யபடவேண்டி இருக்கின்றார்கள். அது சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் இன்று அறிவித்திருக்கின்றோம். அத்துடன், தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு முன்பாக புதிய தலைவர் மற்றும் நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இம்முறை கறுப்பு ஜூலை நினைவேந்தல் தமிழரசுக் கட்சியின் அனைத்துக் கிளைகளிலும் முன்னெடுக்கப்படும். இதன்படி அனைத்து மாவட்டங்களிலும் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்படும். இந்தத் துயரத்தில் பங்கெடுக்குமாறு அனைத்து மக்களையும் நாங்கள் அழைக்கின்றோம்.

அத்துடன், இலங்கையில் தற்போதும் மனிதப் புதைகுழிகள் இனங்காணப்படுகின்றன. பல்வேறுபட்ட தடயப் பொருள்கள் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மீட்புப் பணிகளின்போது சர்வதேசம் பங்கெடுக்கவேண்டும். இது எங்கள் இறுக்கமான வலியுறுத்தலாக இருக்கின்றது - என்றார். (அ-ம-125)

### நவாலி...

மாக நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தபோது, இலங்கை வான் படையினர் மூர்க்கமாக தாக்குதல்களை தேவாலயத்தின் மீது நடத்தினார்கள். 13 குண்டுகள் மூலம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 147 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கான 28ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இன்றையதினம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம)

### எச்சரிக்கை...

எனினும் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவோ அல்லது அவர் தலைமையிலான மேலிடங்களோ என்னுடைய எச்சரிக்கையைக் கேட்கவில்லை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னைய அரசாங்கத்தின் 'நவீன நாணயக்கொள்கையின்' விளைவாக நாடு முகங்கொடுக்கவிருக்கும் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை மூன்று வருடங்களுக்கு முன்னரே நான் கணித்தேன். மத்திய வங்கியின் அப்போதைய நடவடிக்கைகளின் ஆபத்தான தன்மை குறித்து நான் எச்சரித்தேன். இதனால், மூன்று வருடங்களுக்கு முன்பாகவே ஓய்வுக்கு (முற்கூட்டிய ஓய்வு) நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். அந்தக் காலப்பகுதியில் நாணயக் கொள்கைக் குழுவின் தலைவர் என்ற ரீதியிலும், சிரேஷ்ட பிரதி ஆளுநர் என்ற வகையிலும் நான் எப்போதும் கரிசனைகளை வெளிப்படுத்தியிருக்கின்றேன். இருப்பினும் மத்திய வங்கி உத்தியோகத்தர்களான நாம், நிர்வாகத்துடனும், கொள்கை ரீதியில் அரசாங்கத்துடனும் எமக்கிருந்த உள்ளகக் கருத்து வேறுபாடுகள் தொடர்பில் பகிரங்கமாக எதனையும் வெளிப்படுத்தவில்லை.

நான் மாத்திரமன்றி மத்திய வங்கியின் ஏனைய உத்தியோகத்தர்களும் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினார்கள். நான் வெளியேறிய பின்னரும்கூட அவர்கள் கரிசனைகளை முன்வைத்தார்கள். இருப்பினும் அவற்றை யாரும் செவிமடுக்கவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அப்போதைய ஆழ நிலையில் மத்திய வங்கியின் உயர்மட்டத்திலிருந்தும், வெளியிலிருந்தும் மாற்று சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக அப்போது மத்திய வங்கியினால் 6 மாதகாலத்துக்கான பொருளாதார செயற்றிட்டம் வெளியிடப்பட்டது. இருப்பினும் முற்றுமுழுதாக சாத்தியமற்றதும், பொய்யானதுமான எதிர்வுகூறல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அச்செயற்றிட்டம் ஏப்ரல் மாத இறுதியில் எவ்விதப் பலனையும் தராமல் முடிவுக்கு வந்தது - என்றார். (அ-ம)

### இரண்டாம்...

பொருளாதார மீட்சி அவ்வாறே இருக்கும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முந்தைய சூழ்நிலை மற்றும் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொள்ளும்போது, தற்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு விலையும் இப்போது குறைந்து வருகிறது. அரசாங்கம் இப்போது பல இறக்குமதிப் பொருள்களுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ள நிலையில் எதிர்காலத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும். அனைத்துத் தரவுகளும் நுகர்வோருக்கு நம்பிக்கை திரும்பியதைக் காட்டுகின்றன. மேலும் இந்த ஆண்டு முழுவதும் ரூபா வலுவடைந்து வருகிறது. மேலும் பங்குச் சந்தை விலைச் சுட்டெண் மிகவும் நேர்மறையாக இருப்பதை நீங்கள் காணலாம். எனவே நுகர்வு அதிகரிப்பதால் தேவை இப்போது அதிகரித்து வருகிறது - என்றார். (அ-ம)

**வீடு வாடகைக்கு**

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் 50m தூரத்தில் 2 மாடி வீடு. அறைகள் வாடகைக் குண்டு. யாழில் இருந்து கொழும்பு செல்பவர்கள் தங்குவதற்கும் ஏற்றது நாள், மாத வாடகைக்குண்டு.

☑ காரியாலய வேலைக்கு பணியாளர்கள் தேவை. ஆண், பெண் 10 பேர் தேவை O/L தகைமையுடன்.

**076 112 4145**

**விற்பனைக்கு**

மகேந்திரா (BOLERO) DAD வாகனம் விற்பனைக்குண்டு.

**077 968 8421**

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் குகதாஸ் (தாஸ்)



யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகவும் Bahrain ஐ வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் (சின்னையா ஆசாரி) குகதாஸ் அவர்கள் கடந்த (03.07.2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணி (சந்திரா), காலஞ்சென்ற தவமணி தேவி மற்றும் சகுந்தலா (சசிலா), சண்முகதாஸ் (ராசன்), மணிமேகலை (மஞ்சு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 4880 344, 076 165 3322, 077 252 0167.

தகவல்: குடும்பத்தினர். (வேலணை)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## நீதித்துறைக்கு...

விகாரைக் கட்டுமானங்கள் தொடர்பில், குருந்தூர்மலையில் நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகளில் சரத் வீரசேகர கருத்துச் சொல்ல முற்பட்டதைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவால் வீரசேகர கருத்து வெளியிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் கண்டனம் தெரிவித்த வீரசேகர, 'இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை தமிழ் நீதிபதி உணர்ந்து கொள்ளவேண்டும்' என்றும் தெரிவித்தார். இந்த நிலையிலேயே சரத் வீரசேகரவின் கருத்துக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கருத்துகள் வருமாறு:-

**எம்.ஏ. சுமந்திரன்**

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மீறப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னணியில், அதனைப் பார்வையிடுவதற்காக நீதிபதி அங்கு பிரசன்னமானார். அவ்வாறிருக்கையில், தனது பணியைச் செய்த நீதிபதியொருவரை நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி இவ்வாறு விமர்சிப்பது ஏற்புடையதல்ல. வீரசேகர இது போன்ற இனவாதக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றமை வெறுக்கத்தக்கது .

**க.வி. விக்னேஸ்வரன்**

தன்னை ஒரு சிங்கள அபிமானியாகவும், சிங்களத் தேசியவாதியாகவும் காண்பித்துக்கொள்ளும் சரத் வீரசேகர கூறுகின்ற கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்வதில்லை. சரித்திரத்தை அறிந்துகொள்ளாமல் 'இலங்கை சிங்கள - பௌத்த நாடு' என்று அவர் கூறுவது அவரது அறியாமையையே காண்பிக்கிறது. சரத் வீரசேகரவுக்கு தன்னை ஒரு சண்டியர் போன்று காண்பித்துக்கொள்ளவேண்டிய தேவை இருக்கலாம். ஆனால், மீண்டும் மீண்டும் இலங்கையை சிங்கள - பௌத்த நாடு என்று கூறுகின்ற அவர், முதலில் சரித்திரத்தை அறிந்து கொள்ளவேண்டும். துட்டகைமுனு சிங்களவர் அல்லர் என்பதை அவர் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரே விடயத்தை நூறு முறை கூறுவதால் அது உண்மையாகிவிடாது. அதேபோன்று நீதிபதியை அவமதிக்கும் விதமாக சரத் வீரசேகர கூறியிருக்கும் கருத்துக்கள் மிகமிகக் கேவலமானவை.

**செ.கஜேந்திரன்**

மனநோயாளியான வீரசேகர, நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் வெளியிட்டுள்ள இனவெறிக்கருத்தை கடுமையாக கண்டிக்கிறோம். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி குருந்தூர் மலைப்பகுதிக்கு வருகை தந்திருந்த அன்று, நானும் அவ்விடத்தில் இருந்தேன். அன்றையதினம் நீதிபதி சரத் வீரசேகரவை அப்பகுதியிலிருந்து வெளியேற்றவோ அல்லது பார்வையிட தடை விதிக்கவோ இல்லை. மாறாக, கருத்துக்களை வெளியிடுவதற்கு மாத்திரமே அனுமதி மறுக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில் இத்தகைய கருத்தை வெளியிடுவது என்பது நீதிபதியை அச்சுறுத்தி, அவர் சுயாதீனமாகச் செயற்படுவதை தடுப்பதுடன் இவ்வழக்கு விசாரணைகளிலிருந்து அவரை விலகச்செய்யும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகரவின் இக்கருத்துக்கள், இலங்கையின் அரச இயந்திரம் எந்தளவுக்கு இனவெறிப்போக்கில் இயங்குகிறது என்பதற்கான பிந்திய உதாரணமாகும். எனவே, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்படும் சரத் வீரசேகர உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் அவர் தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து நீக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம)

## ஜனாதிபதி...

என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். அரசாங்கத்தை அமைப்பதற்குக் கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதால் எமது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. கட்சி என்ற ரீதியில் முன்னேற்றமடையும் நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளோம். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை அமைச்சரவைக்குள் இருந்தவர்களே பலவீனப்படுத்தினார்கள். அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தி அதனூடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் வகையில் அருகில் இருந்தவர்கள் வகுத்த சூழ்ச்சியை நாங்கள் தோற்கடித்தோம். பொதுஜன பெரமுனவில் இருந்து சந்தர்ப்பவாதிகள் வெளியேறியுள்ளார்கள். கட்சியை முழுமையாக மறுசீரமைத்துள்ளோம். நாடளாவிய ரீதியில் மக்கள் கூட்டத்தை நடத்தி வருகிறோம். மக்கள் ஆதரவுடன் மீண்டும் வலுப்பெறுவோம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை அறிவிப்போம் - என்றார். (அ-ம)

## வீட்டில்...

வரை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களே என்று அந்தக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்கள் தேர்தல் ஆணையத்தில் அண்மையில் என்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்று எமக்குத் தெரியாது. ஆனால், தேர்தல் காலத்தில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில்தான் போட்டியிட்டார்கள். ஆனபடியால் அவர்கள் அனைவரும் சட்டரீதியாக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது பொதுவான இணைவுக்காகப் பயன்படுத்தும் ஒரு பெயராகும் - என்றார். (அ-ம-125)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

## நிலப்பரப்பு

- ✓ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
- ✓ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
- ✓ நன்னீரூற்றுச் சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 1200000/=
(பன்னிரண்டு இலட்சம்)


**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.

**தொடர்புகளுக்கு :- ஜெயம்**

**077 81 47 389**
**077 98 65 457**


# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 . 02 . 1965 | 28 . 06 . 2023 |



## திரு. சிவானந்தம் ஜெயவதனன் (லண்டன்)

பங்களாலேன் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திரு. சிவானந்தம் ஜெயவதனன் அவர்கள் கடந்த (28.06.2023) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தம் (ஆசிரியர்) இராசம்மா (ஓய்வுபெற்ற - அதிபர்) தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவரான தனபாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், தர்சினியின் (லண்டன்) அன்புக் கணவரும், சரண், மதுரன், கீரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயமாலா, ஜெயகேயன் (லண்டன்), ஜெயவிந்தன் (புள்ளிவிபரவியலாளர், மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகலா, தங்கபாலன், தரணீதரன், தனரஞ்சினி (பிரான்ஸ்), தனரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

- இறுதிக்கிரியை நிகழ்வுகளை https: //youtube.com/live/Z8aS6ad1 ENI?feature=share என்ற இணைய முகவரியூடாக நேரடியாகப் பார்க்கமுடியும்.
- மல்லாகம் இல்லத்தில் இன்றைய தினம் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
தர்சினி : + 4474 9720 4210
ஜெயக்குமார் : + 4479 5197 8167
ஜெயகேயன் : + 4479 3912 7531
ஜெயவிந்தன் : + 94 753 221 225
தங்கபாலன் : + 9476 655 3049

**தகவல்:**
**ஜெயவிந்தன் (விந்தன்)**
**சகோதரன்**

**பங்களாலேன், மல்லாகம்.**

(cs.25367) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்தியப் பிரமதமர் மோடியும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பொருளாதார விடயங்கள் தொடர்பிலும், இந்தியாவின் கடன்மறுசீரமைப்புக்காலம் தொடர்பிலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் இருதரப்பும் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறிருக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியா ரணிலிடம் வலியுறுத்த வேண்டிய விடயங்களை உள்ளடக்கியே மோடிக்கு அனுப்பப்படவுள்ள இந்தக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், மறு அறிவித்தலில்லாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அந்தக் கடிதத்தில் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்தக் கடிதம் தற்போது சம்பந்தனின் பரிசீலனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தன் அனுமதி வழங்கிய பின்னர் அது மோடிக்கு அனுப்பிவைக்கப்படும்.

இலங்கையின் பொருளாதார மீளெழுச்சிக்காக இந்தியா கடனுதவிகளை வழங்கிய நாள்களில், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில், அண்மைக்காலங்களாக இந்த விடயத்தில் மௌனித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-125)

## போலி...

என்று சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தி இந்த மோசடி நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் 50 ஆயிரம் ரூபா வழங்கி சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ளார். அந்த சாரதிப் பத்திரம் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டதை அடுத்து மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

விசாரணைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வாகனம் ஒன்றில் சென்று கைவிரல் அடையாளம் என்பவற்றைப் பெற்றுக் கொண்டு, போலியாக சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த வாகனத்தைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-எ-26)


### A/L Online Classes

English Medium
Biology, Chemistry
077 807 5566
(CS/25455)AH-1

### வேலைவாய்ப்பு

இலங்கையின் பிரசித்தி பெற்ற முன்னணி நிறுவனம் ஒன்றின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளையில் வேலைவாய்ப்புக்கள். சுயவிபரக் கோவையை Whatsapp செய்யவும்.
077 874 7451, 077 865 1993

### குத்தகைக்கு / வாடகைக்கு

யாழ். குருநகர் பற்றிக்ஸ் வீதியில் 800 சதுர அடி கொண்ட பூட்சிற்றி அனைத்துப் பொருட்களுடனும் வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும்.
076 855 6300
077 053 5121
(CS/25408)AH-1

### கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
076 573 4507

### வீடு விற்பனைக்கு

நாவற்குழியில் 1 1/4 பரப்பில் அமைந்த வீடு. கிணறு மற்றும் பயனுள்ள மரங்களுடன் விற்பனைக்குண்டு.
077 358 2704

### விற்பனைக்கு

பளை நகரில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
077 990 5694
(CS/51174)AH-1

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரில் வீடு வாடகைக்குத் தேவை.
T.P: 077 277 7779

### வீடு நாள் வாடகைக்கு

வெளிநாடுகளிலிருந்து குடும்பமாக வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட வீடு யாழ்நகரில் நாள் வாடகைக்குக்கொடுக்கப்படும்.
077 633 3000
(cs 254778) (N-1)

### Maths and Science Classes

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். கடந்தகால வினாக்களும் செய்துவிடப்படும். (CS/25456)AH-1
077 074 7906, 076 686 7099

### ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
K.Ganesh B.A 077 766 8725

### பணிநிலை வெற்றிடம்

பிரபல ஐஸ்கிறீம் விநியோக நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதி (Sales Rep)
யாழ். மாவட்டத்திற்கு தேவை.
தொடர்பு: 076 849 0987

### வேலையாள் தேவை

தங்கி நின்று வீட்டுவேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் தேவை. (சம்பளம்பேசித்தீர்மானிக்கப்படும்.
077 642 9012, 077 786 1472
(cs51177) (N-1)

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல இயற்கை மலர் விற்பனை நிலையத்துக்குப் பெண் பணியாளர்கள் தேவை. (CS/25479)AH-1
077 400 5023

### வீடு வாடகைக்குத் தேவை

இணுவில், கோண்டாவில், கொக்குவில், K.K.S வீதி அல்லது அண்மையாக மூன்று பேர் உள்ள அரச உத்தியோகத்தர் சிறிய குடும்பம் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 076 532 7368

### தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து பணியாற்ற (பொய், களவு இல்லாத) பணிப்பெண் தேவை.
076 666 2313
077 360 4023

### மேல் மாடி வீடு விற்பனைக்கு

- ✓ யாழ். மானிப்பாயில் 2 பரப்பில் அமைந்த லக்சறி வீடு (மேல்மாடி) சகல தளபாட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
- ✓ 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 102 2763

### வேலையாள்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு திருநெல்வேலியில் வேலைசெய்வதற்கு மேசன், கூலி, கூலி உப ஒப்பந்தகாரர் தொழிலாளர்கள் தேவை.
077 873 9169, 077 239 7211
(cs 51162) (N-1)

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்துக்கு ஆண் வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.
077 419 5015
விநாயகர் ஸ்ரோர்ஸ்
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(51170)AH-1

### முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Whatsapp: 077 756 3781
jenyjude77@yahoo.com

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும்

- * பிரதான காபற் வீதி முகப்புடன்
- * புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- * மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- * சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச தனியார் பேரூந்துகள் அதிகம் பயணிக்கும் பிரதான வீதி.
- * காபற் வீதி முகப்புடன் ஒரு பரப்பு மூன்று இலட்சம் ரூபாய் பின் துண்டுகள் 1 பரப்பு ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்.
- * பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- * நன்னீரூற்று.

தொடர்பு:
076 8260 354, 076 0570 354


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஞாயிற்றுக்கிழமை (09.07.2023)

தோளுக்கு வீரம் உண்டு
தோற்காத நியாயம் உண்டு
நீதிக்கு நெஞ்சம் உண்டு
நாம் வாழலாம்
சிரிக்கும் ஏழை முகம் பார்க்கலாம்
சிந்தும் கண்ணீர் தனை மாற்றலாம்.

- புலமைப்பித்தன்



# வடக்கில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க அதிரடியான திட்டங்கள் தயார்!

**ஆளுநர் பி.எஸ்.எம். சார்ல்ஸ்**
**'உதயன்-சஞ்சீவிக்கு'**
**பிரத்தியேக நேர்காணல்**

○ நேர்கண்டவர்: ஜெயச்சந்திரன் சுலக்சன்

**கே:** **வடக்கின் முதல் பெண் ஆளுநர், இரு தடவைகள் ஆளுநராக இருந்தவர் என்ற பெருமைகளுக்குச் சொந்தக்காரர் நீங்கள். வடக்கில் ஆளுநராக நீங்கள் முதல்முறை பதவி வகித்த போதும், இப்போதும் இங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சவால்கள்..?**

**ப:** இப்போது வடக்கில் பல பிரச்சினைகள் முன்னரை விட விஸ்வரூபமெடுத்துள்ளன. போதைப்பொருள் பாவனை, தற்கொலைகள், வன்முறைக்குழுக்கள், அதைவிட மிக முக்கியமாக இலங்கையிலேயே கொழும்புக்கு அடுத்தபடியாக விபத்துகள் என்பன வடக்கில் அதிகரித்துள்ளன. நான் கடந்தமுறை இங்கில்லாத கால இடைவெளியில் பெரிதாக அபிவிருத்தித் திட்டங்களெதுவும் நடைபெற்றதாகவும் காணமுடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் நாடெங்கும் நிலவிய பொருளாதாரத் தடையால் அவ்வாறான பெருமெடுப்பிலான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என எண்ணுகின்றேன்.

**கே:** **நீங்கள் இதற்கு முன்னர் – முதல்தடவையாக – ஆளுநராகப் பதவி வகித்தபோது , யாழ்ப்பாணத்தில் நீங்கள் நிற்பதில்லை, மக்களைச் சந்திப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உலாவியதே?**

**ப:** என்னுடைய முதலாவது பதவிக்காலத்தில் தான் கொரோனாப் பெருந்தொற்று நிலவியது. அதனால் கொரோனாப் பரவுகையைத் தடுத்தல், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், கொரோனாத் தொற்றுக்குள்ளானொருக்கு சிகிச்சை வழங்கல், மக்களின் பொருளாதாரம் பாதிப்புறாமல் தடுத்தல், பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்தல், நிவாரணங்களை வழங்கல் போன்ற பணிகளில் மட்டுமே எனது முழுக்கவனமும் இருந்தது.

அத்தோடு கொரோனா மனிதர்களின் சுவாசம் வழியே பரவும் தொற்றென்பதால், மக்களைச் சந்திப்பதைத் தவிர்க்கும்படி சுகாதார ஆலோசனை எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் அதிகளவான மக்களைச் சென்று சந்திக்க முடிந்திருக்கவில்லை. ஆனால் அலுவலகத்தில் இருந்தபடியே கொரோனாத் தடுப்புப் பணிகளை நான் தீவிரமாக மேற்கொண்டேன். நிகழ்நிலைக் கூட்டங்கள் வழியே உரிய அறிவுறுத்தல்களை அல்லும் பகலும் நான் வழங்கியபடியே இருந்தேன். அதன் பயனாக இலங்கையிலேயே கொரோனாத் தடுப்பில் முன்னுதாரணமான மாகாணமாக வடக்கு மாறியது. எமது மாகாணத்தில் நாம் மேற்கொண்ட திட்டங்களையே ஏனைய மாகாணங்களும் பின்னர் கைக்கொண்டன.

அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகமொன்று உலகில் கொரோனாவை வெற்றிகரமாகக் கையாண்ட 5 நாடுகளில் இலங்கையை - அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தைத் - தேர்வு செய்தது. இதுதொடர்பில் அந்தப் பல்கலைக்கழகத்தினர் எமது கொரோனாத் தடுப்புத் திட்டங்கள் தொடர்பில் என்னிடமும் கருத்துகளைக் கேட்டறிந்திருந்தனர்.

இப்படி மக்களிடம் நேரடியாகச் செல்வதை கொரோனா தடுத்திருந்தாலும், மக்கள் பணியிலேயே என் நேரத்தைச் செலவிட்டிருந்தேன். எனக்கு முகத்தைக் காட்டி பிரபலம் தேடுவதில் நாட்டமில்லை. மனப்பூர்மாக மக்கள் சேவை செய்தாலே போதும். அதிலும் நான் அதிகம் நேசிக்கும் வடக்கு மக்களுக்கு சேவை செய்வதை பாக்கியமாகக் கருதுகிறேன்.

**தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் முடிவெடுக்க அரச அதிபர்களுக்கு அதிகாரமுண்டு!**

**கே:** **வடக்கில் இளையோரிடம் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையே இப்போதுள்ள சவால்களில் முக்கியமானது என நீங்கள் குறிப்பிட்டீர்கள். அந்தப் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள்?**

**ப:** போதைப்பொருள் பாவனையென்பது உலகளாவிய பிரச்சினை. எமது பகுதியில் தற்போதுதான் அதன் பாதிப்பு அதிகமாக உணரப்படுகின்றது. போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதென்பது எந்த நாட்டிலும் சாத்தியமற்ற ஒன்று. எனவே போதைப்பொருளை ஒழிப்பதைவிடவும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுத்தலும், இளையோர் போதைப்பொருளை இனிமேல் நாடாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் தான் இப்போது எம் முன்னுள்ள வழிகள்.

போதைப்பொருளை வாங்க , நுகர எவருமில்லையாயின் போதைப்பொருள் விற்பனையும் தானாகக் குறைந்து இல்லாமல் போய்விடும். எனவே போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வூட்டலை பாடசாலை மாணவர்களிடமும், பெற்றோரிடமும் ஏற்படுத்துவதற்கான இருவேறு செயற்றிட்டங்கள் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு என்பவற்றோடு இணைந்து உரிய அதிகாரிகள் வகுத்து, பரிசீலித்து வருகிறார்கள். விரைவில் இந்தப் போதைக்கு எதிரான விழிப்புணர்வுத் திட்டத்தை வடக்கில் தீவிரமாக முன்னெடுப்போம்.

**கே:** **பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயான உறவுப்பிணைப்பு இப்போது அற்றுவிட்டது. அதற்கு முக்கியமான காரணம், பெற்றோரும் பிள்ளைகளும் சந்தித்து உறவாடுவதற்கான நேரத்தை தனியார் வகுப்புகள் விழுங்கிவிட்டன. இதனைச் சீராக்கும் வகையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் ' 'இரு நாட்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை' என்ற திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார். அதனை ஏனைய அரச அதிபர்களும் பின்பற்றத் தொடங்கியுள்ளார்கள். இந்தத் திட்டம் பற்றிய உங்கள் எண்ணம் என்ன?**

**ப:** உண்மையில் இந்தத் திட்டத்தை நான் ஏற்கனவே வவுனியா அரச அதிபராக இருக்கும் போது அங்கு செயற்படுத்தியிருந்தேன். இப்போது இங்கு வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. நான் வார இறுதி நாள்களில் (சனி, ஞாயிறு) வகுப்புகளை நடத்தக்கூடாது என்ற திட்டத்தைக் கொண்டுவந்தேன்.

அத்தோடு தினமும் காலை 6 மணிக்கு முன்னதாக , மாலை 6 மணிக்குப் பின்போ வகுப்பு

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 ஜூலை 2023

# வடக்கில்.....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை நடத்தக்கூடாது, சகல தனியார் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும், மாணவர்களின் வரவு பதிவு செய்யப்பட வேண்டும், மாணவரொருவர் பாடசாலைக்கோ, தனியார் வகுப்புக்கோ வராதுவிடின் உடனடியாக அந்த விடயம் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும், ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவனத்திலும் மாணவிகளின் நலனைக் கவனிக்க பெண் ஊழியர் ஒருவர் கட்டாயமாக பணியில் இருக்கவேண்டும், வகுப்பில் இருந்து சகல மாணவர்களும் வெளியேறும்வரை குறைந்தது ஒரு ஊழியராவது தனியார் கல்வி நிலையத்தில் தரித்து நிற்கவேண்டும் என்ற சட்டங்களைக் கொண்டு வந்திருந்தோம்.

இது மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் கட்டளையூடாக சட்டமாக்கப்பட்டு, நான் அங்கு அரச அதிபராக இருக்கும் வரை பின்பற்றப்பட்டு வந்தது.

இப்போது அத்தகைய திட்டங்களை வடக்கின் அரச அதிபர்கள் செய்ய முன்வந்திருக்கிறார்கள். மிக நல்ல விடயம். இதை அவர்கள் சிறப்பாக முன்னெடுத்தால் ஆரோக்கியமான இளைய சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

வடக்கில் உள்ள சகல பாடசாலைகளிலும் இனிமேல் தினமும் ஒரு பாடவேளை கட்டாயமான மாணவர்களின் மன இறுக்கத்தைத் தளர்த்தும் வகையில், கற்றல் தவிர்ந்த யோகாசனம், விளையாட்டு, இசை,நடனம் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்துமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன். இதனூடாக மாணவர்களின் ஆற்றல்களை சரியான வழியில் நெறிப்படுத்துவதால், அவர்கள் தவறான வழியில் செல்வது தவிர்க்கப்படும்.

பிள்ளைகளைச் சரியான வழியில் கையாளும் 'நல்ல பெற்றோராக இருத்தல்' என்னும் நோக்கில் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இதனூடாக பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுநிலையை நெருக்கமாக்கி, ஆரோக்கியமான குடும்ப ஊடாட்டத்தை உருவாக்குவதே எமது இலக்கு.

**கே: ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களை இருநாள்கள் மூடுமாறு சட்டம் போடவோ, உத்தரவிடவோ அரச அதிபருக்கு சட்டரீதியான அதிகாரம் கிடையாது என்று சொல்லப்படுகிறதே..?**

ப: 18 வயதுக்குட்ட பிள்ளைகள் சகலரினதும் சட்டபூர்வமான பாதுகாவலர்கள் அரச அதிபரும், மாவட்ட நீதிமன்றமும்தான். பெற்றோரைவிடவும் அரச அதிபருக்கும், மாவட்ட நீதிமன்றுக்கும் தான் பிள்ளைகளின் விடயத்தில் கூடிய பொறுப்புள்ளது. எனவேதான் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களின் தனியார் கல்வி விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை அரச அதிபர்களிடம் கையளித்துள்ளேன். எனவே 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் உரிய உத்தரவுகளைப் போட அரச அதிபருக்கு சட்டரீதியாக அதிகாரமுண்டு.அந்த உத்தரவைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அரச அதிபருக்கு அதிகாரம் உண்டு.

**கே: தனியார் கல்வி நிறுவனங்களில் அரைவாசிக்கும் அதிகமானவை பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன என்பது தரவுகள் மூலம் புலனாகின்றது. எந்தச் சட்ட வரையறைக்குட்பட்டு தனியார் நிறுவனப் பதிவுகள் இடம்பெறுகின்றன?**

ப: தனியார் கல்வி நிறுவனங்களின் பதிவு என்பது சர்ச்சைக்குரிய ஒன்றுதான். இந்தத் தனியார் கல்வி நிறுவனங்கள் எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வி முதலில் எழுகின்றது.

தொழிற்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தால் அங்கு 18 வயதுக்குட்பட்ட மாணவர்களை முதலீடாக்கி, பணம் சம்பாதிக்க அனுமதி கிடையாது. அதேபோல வியாபாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருந்தால் அதன் கீழ் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. எனவே எப்படிப்பார்த்தாலும் தனியார் கல்வி நிறுவனப் பதிவுகள் குழப்பகரமானவையாகவே உள்ளன. இந்தப் பதிவுகளையும் அரச அதிபர்கள் ஒரு சீர்நிலைப்படுத்த வேண்டும்.

**கே: வடக்கில் இப்போது ஒரு சில இடங்களில் மட்டும் அதிகமாக உணரப்படும் குடி தண்ணீர்ப் பிரச்சினை, எதிர்காலத்தில் சகல பகுதிகளிலும் விஸ்வரூபம் எடுக்கும் ஆபத்து அதிகரித்து வருகின்றது. இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு என்னதான் சரியான தீர்வு? அதற்கான உங்கள் முயல்வுகள் எவை?**

ப: ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களில் நான் கலந்து கொள்ளாவிட்டாலும், அது தொடர்பில் அக்கறை எடுத்துள்ளேன். உரிய அதிகாரிகளும், நிபுணர்களும் இணைந்து இது வரை 7 திட்டங்களை முன்வைத்துள்ளனர். இவை நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஊடாக உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த 7 திட்டங்களிலும் உள்ள சாதக பாதகங்கள், நிலைபேறான தன்மை, செலவினம், சூழல் பாதுகாப்பு போன்ற பல விடயங்களை அமைச்சில் உள்ள குழு ஆராய்ந்து பொருத்தமான திட்டமொன்று தெரிவு செய்யப்படும்.

**கே: இலங்கையிலேயே கொழும்புக்கு அடுத்தபடியாக விபத்துகளும், விபத்து மரணங்களும் அதிகம் நிகழ்வது வடக்கில் , யாழ்ப்பாணத்தில்தான். எனவே இந்த விபத்துகளைக் குறைக்கவும், விபத்துகளுக்கு பெருமளவு காரணமாக இருக்கும் போக்குவரத்து நெருக்கடியைத் தணிக்கவும் என்ன செய்யப்போகிறீர்கள்?**

ப: இன்றும் கூட என்னிடம் கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியை அண்மித்த மக்கள் வந்திருந்தார்கள். அந்தச் சந்தையை ஒட்டியுள்ள வீதிகளில் நீதிமன்ற உத்தரவு போடப்பட்டும் கூட, அதை மீறும் வகையில் நடைபாதை வியாபாரம், வாகனங்கள் தரித்து நிற்றல் என்பன காரணமாக மக்களின் போக்குவரத்தில் சிக்கல்நிலை தோன்றியுள்ளதாக என்னிடம் அவர்கள் முறையிட்டனர். இதுபோன்ற நிலை திருநெல்வேலிச் சந்தைப் பகுதி, யாழ்.நகரப்பகுதி ( குறிப்பாக பஸ்நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகள்) என்பவற்றிலும் நிலவு கின்றன. இத்தகைய இடங்களில் போக்குவரத்தைச் சீராக்குமாறு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். துறைசார் நிபுணர்கள், பொலிஸார், அதிகாரிகள் என்போரை உள்ளடக்கிய 'விபத்துத் தடுப்பு விழிப்பு ணர்வுக்குழு' ஒன்றை முன்னர் அமைத்திருந்தோம்.பாதைகளைச் சீரமைத்தல், போக்குவரத்துக்கு இடையூறான பஸ்நிலையப் பரப்பைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து விபத்துகளைக் குறைத்து , போக்குவரத்து நெருக்கடியையும் தணித்திருந்தோம். மீண்டும் அந்தக் குழுவை அமைத்து விபத்துகளைக் குறைக்கும் திட்டங்களைச் செயற்படுத்த எண்ணியுள்ளோம். இதனூடாக விபத்துகளைப்பெருமளவுக்கு குறைக்கமுடியும். ஆனாலும் பொதுமக்களும் போக்குவரத்து ஒழுங்குகளைச் சீராகக் கடைப்பிடிக்கவேண்டும். அப்படிச் செய்தாலே அரைவாசிக்கும் அதிக விபத்துகளைத் தவிர்க்கலாம்.

**கே: யாழ்.நகரின் மத்தியில் இருக்கும் பஸ் நிலையத்தால்தான் நகரின் போக்குவரத்து நெரிசல் இவ்வளவு அதிகமாக இருக்கக் காரணம் என்று பலரும் குற்றம் சாட்டுகின்றனர். யாழ். பஸ் நிலையத்தை கோட்டைப் பகுதிக்கு இடமாற்றும் முயற்சியில் கடந்த பதவிக்காலத்தில் நீங்களும் ஈடுபட்டிருந்தீர்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்று..?**

ப: இது தொடர்பில் தனியார் பேருந்துச் சங்கத்தினர் என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். தற்போது இந்த விடயம் பற்றிய பேச்சுகள் உரிய தரப்புகளோடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வலுக்கட்டாயமாகத் தீர்வுகளைத் திணிக்க முடியாது. எவருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில், தீர்வைக்காண முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரப் பறவைகளின் இரக்கமற்ற நரபலி!



நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 38 வருடம். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

ச.அன்ரன் அருள்வண்ணன்

**1995** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி 17 வயது மாணவனான எனது கண்ணுக்கு இராணுவ நடவடிக்கையால் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இடம்பெயர்ந்து இருந்த உறவுகள் கூட்டம் தெரிகின்றது. சென். பீற்றர்ஸ் ரோமன் கத்தோலிக்க பாடசாலை இந்த மக்களால் நிரம்பி, அந்தக் கட்டடத்தில் இருந்து வந்த ஆண்கள் கதைக்கும் சத்தம் எனது காதுகளுக்கு கேட்கிறது. பெண்கள் பலர் தெரிகிறார்கள். குடும்பம் குடும்பமாக ஒவ்வொரு பெரிய, சிறிய மரங்கள், ஒதுக்குகள், கட்டடத் தாவாரங்கள் என்பவற்றின் கீழ் தங்கள் உடைமைகளை பின்னால் கட்டியபடி இருந்த சைக்கிளை நிறுத்தி சிறிது ஓய்வு எடுத்து கொண்டு இருந்தனர். அவர்கள் இன்னும் செல்ல வேண்டிய பயணம் மிகப்பெரிதாக இருந்தது. அவர்கள் முகத்தில் சிறிதளவு நிம்மதி. ஏனென்றால் இப்போது அடைக்கலமாகி இருப்பது ஆண்டவன் சந்நிதி அல்லவா. அங்கும்கூட கொலைக்களம் உருவாகுமென்று யார்தான் நினைத்திருப்பர்?

நவாலி ஊரைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு தண்ணீர் கொடுத்தல், உணவு சமைத்தல், நெரிசல் தவிர்த்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் வேலைகளில் மும்முரமாயிருந்தனர். நான் அங்குசென்று கிட்டத்தட்ட முப்பது நிமிடங்களில் நண்பனொருவன் 'வண்ணன் புக்காரா வருகுது' என்றவுடன் பார்த்ததும் விழுந்து படுத்தேன். அதிர்வு தூக்கி எறிந்தது. அதன்பின் கோடையில் மழை பெய்யும் போது தூறல் ,விழுந்து ஒலி எழுப்புவது போல குண்டின் துண்டுகள் பொழிந்து தள்ளின. படுத்தபடி திரும்பி பார்த்தபோது இரண்டு பனை உயரம் அளவுக்கு வானத்தை நோக்கி 'குபுகுபு' என மேல் எழும்பிய கரும்புகை கண்டேன். இந்தப் புகையை மானிப்பாயில் உள்ளவர்கள்கூட பார்க்கக் கூடியதாக இருந்ததாம். எத்தனையோ சடலங்கள், பிணத்துண்டங்கள் அங்கு விழுந்தன. இது எம் நாடி நரம்பு, ரத்தம் ,புத்தி, சதை எல்லாவற்றிலும் ஏற்பட்ட ஆறாவடு. 'ஆனால் நாம் இவற்றை நினைக்கக் கூடாதாம். இதைப் பற்றிப் பேசக் கூடாதாம். சம்பவத்தை உள்ளபடி கூறக் கூடாதாம்' என்பது 2020இல் எமக்கு நேரடியாக விடுக்கப்பட்டுள்ள கட்டளை. மொத்தமாக சரிக்கப்பட்ட 9 குண்டுகள் கிட்டத்தட்ட 150 பேரைப் படுகொலை செய்தும் 450 பேரை கடுமையானதும் சிறியதுமான காயங்களுக்கு உட்படுத்தியும் சரித்தவனின் நோக்கத்தை நிறைவேற்றியது.

படுகொலைக்களத்துக்கு தம்முடைய உறவுகளை தேடிச் சென்றவர்கள் கண்களால் பார்த்தவற்றைத் தாங்க முடியாமல் மயங்கி விழுந்தனர். இவர்கள் பெண்கள் அல்லர் மாறாக மிகவும் உறுதியான ஆண்கள். அவர்களே இவ்வாறு மயங்கி விழுந்தனர். நான் கேட்டவை இவ்வாறு என் மனதில் அது அதிர்ந்து கொண்டே இருக்கிறது. இறந்தவர்களில் பலர் வயிறு வெட்டப்பட்டு குடல் வெளியில் வந்து இறந்து கிடந்தனர். முகங்கள் கரும்புகை படலத்தால் மறைபட்டு இருந்தன. கட்டட இடிபாட்டுத் துகள்களும் உடல்களை மறைத்தன. முகத்தைக் கழுவியே பலரை யார் அவர்கள் என அடையாளம் கண்டு கொண்டார்கள். வெடிப்பு நடைபெற்ற இடத்தில் உடைகள் அகற்றப்பட்ட நிலையிலேயே உடல்கள் காணப்பட்டன. ஆனால் நாம் இவை பற்றிப் பேசக்கூடாதாம். மிகக் கொடூரமான இந்தக் கோரச்செயல் நிமித்தம் ஏற்பட்ட ஆறாவடுவுக்கு நீதித்தீர்ப்பை அத்துடன் தண்டனையை கடவுள்தான் கொடுக்கவேண்டும். இருப்பினும் நினைவேந்தல்கள், இரங்கல் கூட்டங்கள், சம்பவ இடத்தில் இருந்தவர்கள் கூடி அழுது தீர்த்தல் என்பனவற்றால் ஆறாவடு ஓரளவேனும் தற்காலிக ஆற்றுகை அடையும். ஆனால் ஒவ்வொருமுறையும் ஏதோ ஒரு வழியில் நினைவேந்தல் தடைப்பிடிக்கப்படுகிறது.

இவர்கள் அன்று மட்டும்தான் மூர்க்கமானவர்கள், கொடூரர் இன்று திருந்தி விட்டார்கள், மூர்க்கம் குன்றந்துவிட்டது என்பது பொய். இவர்கள் திருந்தி இருந்தால் இந்த இரத்தம் தோய்ந்த இந்த மண்ணில் மக்களை நிம்மதியாகக் கதறி அழவாவது விட்டிருப்பார்கள். ஆனால் இவர்கள் கொலை செய்துவிட்டு தேவாலய முன்றிலிலும் சுற்றியுள்ள தெருக்களிலும் விட்டுச்சென்ற இறந்த உடல்களும் சிதறிய உறுப்புகளும் எங்களுடைய கண்களில் இன்னமும் இரத்தம் தோய்ந்த காட்சியாகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுதான் இருக்கிறது.

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 22

## சில குறிப்புக்கள்

○ பா. துவாரகன்

1838.11.29 அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்த மருத்துவர் எட்வின் லோசன் கொச் ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணத்தில் பயின்று தனது 20 ஆவது வயதில் அரச புலமைப்பரிசிலைப் பெற்று கல்கத்தா மருத்துவக் கல்லூரிக்குச் சென்று மருத்துவப் பட்டம் பெற்றார். இவர் கொழும்பு மருத்துவபீடத்தின் ஆரம்ப விரிவுரையாளர்களில் ஒருவராகவும் இதன் 2 ஆவது அதிபராகவும் கடமையாற்றினார்.
1870 இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு மருத்துவபீடத்தின் முதலாவது அணி மாணவர்களது 2 ஆவது விரிவுரையின்போது உரையாற்றிய மருத்துவர் எட்வின் லோசன் கொச். அந்தக் காலப்பகுதியில் வடபகுதியில் பிரபல்யமடைந்துவரும் ஐரோப்பிய மருத்துவத்தின் மகத்துவத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:
"ஏராளமான வடபகுதி மக்கள் ஐரோப்பிய மருத்துவத்தின் நன்மையை அனுபவிப்பதை எனது நேரடி அனுபவத்திற் கண்டிருக்கிறேன். அங்கு அமெரிக்க மிசனரியினரால் ஆரம்பிக்கப்பட்ட ஐரோப்பிய மருத்துவத்தை இலங்கையின் வேறெந்தப் பகுதி மக்களையும் விட அதிகளவானோர் பின்பற்றுகின்றனர். வடபகுதி மக்கள் சுதேச மருத்துவர்களைக் கைவிட்டு மேலைத்தேச மருத்துவத்துக்கு திரும்பியுள்ளமையைக் காணமுடிகிறது. இலங்கைத்தீவில் வேறு எந்த மருத்துவமனையை விடவும் யாழ்ப்பாணம் ஆடத்துக்கு உதவி மருத்துவமனையை நாடி வந்து சிகிச்சைபெறுவோரின் எண்ணிக்கை அதிகமானதாகும். இது மேலைத்தேச மருத்துவம் அந்தப்பகுதி மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வெற்றிபெற்றிருப்பதை உணர்த்துகிறது. இதனால் அந்தப்பகுதியில் சேவையாற்ற அதிக எண்ணிக்கையான மருத்துவர்களது தேவையை உணர்ந்த மருத்துவர் கிறீன் அங்கு சுதேச மொழியில் ஐரோப்பிய மருத்துவத்தைப் போதிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். இதற்காக ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்."





1835 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்க்கத்தா மருத்துவக்கல்லூரி : ஆசியாவில் மேலைத்தேச மருத்துவம் கற்பிக்கப்பட்ட 2ஆவது மிகப் பழைமை வாய்ந்த மருத்துவக்கல்லூரி

**Image Source: British Library**

கிறீனுக்கு 3 ஆவது பெண் குழந்தை (Mary Ruggles Green) 1870 இல் பிறந்தது. கிறீனது சகோதரி மேரியின் பெயரால் இந்தக்குழந்தை அழைக்கப்பட்டது. மானிப்பாயிலிருந்த கிறீனது மருத்துவக் கல்லூரியில் 1871 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 பேர் கொண்ட புதிய மாணவர் அணியினர் மருத்துவம் பயில ஆரம்பித்தனர். இவர்களில் மூவர் அந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த முன்னணி சுதேச மருத்துவர்கள் மூவரின் நெருங்கிய உறவினர்களாக இருந்தமை கிறீனுக்கு மகிழ்ச்சியையும் தனது பணிகுறித்த திருப்தியையும் ஏற்படுத்தியது.

**கிறீனது 8 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் : தமிழ் மொழி மூலம் மருத்துவம் பயின்ற 3ஆவது அணி (1871- 1873)**

1. ஜே. அமரசிங்கர்
2. எஸ். அருணாசலம்
3. எம். இராமலிங்கம்
4. வி. சித்திரவேலு
5. வி. சதாசிவம் பேற்ஸ்
6. எஸ் சரவணமுத்து
7. எஸ். சின்னத்தம்பி
8. எஸ். சின்னையா
9. கே. தில்லையம்பலம்
10. கே. வைத்திலிங்கம்
11. கே. வேலுப்பிள்ளை



DR EDWIN L. KOCH
MD, CM (ABERDEEN)
PRINCIPAL CEYLON MEDICAL COLLEGE
AND SURGEON GENERAL HOSPITAL


மருத்துவர் கிறீன் 1871 இல் குழந்தை பிறப்புப் பற்றிய சிறு நூலை தமிழில் எழுதி 3000 பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டார். இந்தக்காலப்பகுதியில் கிறீனும் மனைவியும் தமது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியநிலைக்கு ஆளாயினர். கிறீன் தனது மருத்துவத் தேவை கருதி யாழ்ப்பாணத்திலிருந்து அமெரிக்காவுக்கு ஓரிரு ஆண்டுகளில் திரும்புவது குறித்து போஸ்ரன் அமெரிக்க மிசன் சங்கத்துக்குக் கடிதம் எழுதினார். யாழ்ப்பாணத்தில் தனது இடத்துக்கு வேறு ஒரு மருத்துவரை நியமிக்குமாறு இந்தக் கடிதத்திலே கேட்டிருந்தார். 1871 இல் கிறீன் தம்பதியினருக்கு 4 ஆவது குழந்தை கிடைத்தது. கிறீன் தம்பதியினருக்குக் கிடைத்த முதலாவது ஆண் மகவு இது. கிறீன் தனது பெண் பிள்ளைகள் மூவருக்கும் சகோதரிகளின் பெயரை வழங்கியிருந்தார். கிறீன் தனது மகனுக்கு அமெரிக்கர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஒரு பெயரையே வழங்க விரும்பினார். "Nathan". அமெரிக்கர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஒரு பெயராகும். இந்தப்பெயரை அமெரிக்கர் "நேத்தன்" என்று உச்சரிப்பார்கள் தமிழர் " நாதன்" என்று சொல்வார்கள். யோகநாதன், கணநாதன், சிவநாதன், கடம்பநாதன் முதலான இறைவனை நினைவூட்டும் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டும் மரபு தமிழர்களிடையே இன்றும் வழக்கில் உண்டு. தமிழிலே வழங்கப்படும் நாதன் என்பது நாதா என்ற சம்ஸ்கிருத மூலச்சொல்லிலிருந்து வந்தது. இச்சொல் தலைவன், கடவுள், கணவன் முதலானோரைக் குறிக்கப் பயன்படுகிறது. அதேவேளை நாதன் என்பது கிறித்துவப் பெயராகவும் விளங்குகிறது. இந்த நாதன் என்ற சொல் தமிழில் இயேசுநாதரைக் குறிக்கவும் பயன்படுகின்றது.
கிறீனது மகன் நேத்தன் (நாதன்) 1894 இல் யேல் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். பின்னர் மருத்துவம் பயில்வதற்காக கிறீன் மருத்துவம் பயின்ற நியூயோர்க்கில் உள்ள மருத்துவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரியில் சேர்ந்து 1898 இல் எம்.டி. பட்டத்தைப் பெற்றார். நேத்தன் நியூயோர்க்கிலிருந்த சென் லூக்ஸ் மருத்துவமனையில் நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணராகப் (Thoracic Surgeon) பணியாற்றினார். இவர் அமெரிக்க நெஞ்சறை சத்திரசிகிச்சை கழகத்தின் தலைவராக 1925 இல் தெரிவு செய்யப்பட்டார். 1955 ஆம் ஆண்டு 83ஆவது வயதில் கிறீனது மகன் மருத்துவர் நேத்தன் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**யாழ்ப்பாணத்தில் மருத்துவர் கிறீனது இறுதி நாள்கள்**

மருத்துவர் கிறீன் 18 பேர் கொண்ட புதிய மாணவர்களது அணியை 1872 இல் ஆரம்பித்தார். ஓர் அணியைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியை ஆரம்பித்து 3 வருடங்களுக்குப் பின்னரே அடுத்த அணியினர் மருத்துவம் பயில உள்ளீர்க்கப்படுவார்கள். கிறீன் தான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின்னரும் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியைத் தொடர்ச்சியாக இயங்கக் கூடியநிலைக்கு கொண்டுவருவதற்கு அயராது பாடுபட்டதுடன் உள்ளூரில் பணியாற்றக் கூடிய போதியளவு மருத்துவர்களை உருவாக்குவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

**கிறீனது 9 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் : தமிழ் மொழி மூலம் மருத்துவம் பயின்ற 4 ஆவது அணி (1872-1875)**

1. ஏ. அமரசிங்கம்
2. ஆர். அம்பலம்
3. ரி. கனகசபை
4. சி.குமாரவேலு
5. ரிச்சர்ட் எஸ். அடம்ஸ்
6. பெஞ்சமின் லோரன்ஸ்
7. வி. செல்லப்பா
8. என். எல். ஜோசுவா
9. என். தம்பிமுத்து
10. எம். நன்னித்தம்பி
11. ஆபிரகாம் வி. நரசிங்கர்
12. ஜோசுவா கே. பெரியதம்பி
13. வி. பொன்னம்பலம்
14. கே. பொன்னம்பலம்
15. எஸ். பொன்னம்பலம்
16. முத்தையா எஸ். ரோப்ஸ்
17. என். மூத்ததம்பி
18. வி. வேதாவனம்




மருத்துவர் கிறீனிடம் மருத்துவம் பயின்ற மாணவர்களான மருத்துவர் சப்மான் வைத்திலிங்கம், மருத்துவர் சி.ரி. மில்ஸ் ஆகியோர் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவமனையிலும் கிறீனுக்கு உதவியாகப் பணிபுரிந்தனர். எல்லாமாக 6 பேர் இங்கு பணிபுரிந்தனர். இவர்களுக்கான வேதனம் பிரித்தானிய அரசிடமிருந்து கிடைத்த நன்கொடையிலுருந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்திலிருந்தும் வழங்கப்பட்டது. மருத்துவர் கிறீனுக்கு அமெரிக்க மிசனரியினர் ஊதியம் வழங்கினர்.
அக்காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் மேலைத்தேச மருத்துவ வசதிகள் போதியளவு கிடைக்கவில்லை. இதனால் கீழைத்தேசத்தில் பணியாற்றும் கிறித்துவ மிசனரி ஊழியர்களதும் அவர்களது குடும்பத்தவர்களதும் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமெரிக்காவின் போஸ்ரனிலுள்ள அமெரிக்க மிசன் சங்கம் மருத்துவ மிசனரிகளையும் காலத்துக்குக்காலம் பிறதேசங்களுக்கு அனுப்பிவந்தது. மருத்துவர் கிறீனும் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க மிசன் சங்கமும் (ACM in Jaffna) அமெரிக்க மிசன் சங்கத்தின் பிரதான நோக்கத்தை விட்டு விலகிச் செல்வதான எண்ணம் போஸ்ரனிலுள்ள பிறதேசங்களுக்கு மிசனரிகளை அனுப்பும் அமெரிக்க மிசன் சங்கத்துக்கு (ABCFM) ஏற்பட்டது. எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க மிசனரியினரும் மருத்துவர் கிறீனும் ஆற்றும் நற்பணியைக் கருதி இதனை ABCFM மன்னித்திருக்கலாம்.

ஆசியாவின் பழைமைவாய்ந்த மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரிகளும் 1820 இல் யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு என்ற இடத்தில் அமெரிக்க மிசனரி மருத்துவரான ஜோன் ஸ்கடர், டிஸ்பென்சரி ஒன்றை நிறுவினார். இதுவே மேலைத்தேச (ஐரோப்பிய) மருத்துவத்தைப் பரப்பும் நோக்குடன் உலகிலேயே முதலாவதாக அமைக்கப்பட்ட மேலைத்தேய மருத்துவ மிசன் டிஸ்பென்சரியாகும். (The First Western Medical Mission Dispensary of the World).
1823 இல் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு அரசாங்கத்தால் மேலைத்தேச மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. (Ecole de Medicine de Pondicherry). இதுவே ஆசியாவின் மிகப் பழைமைவாய்ந்த மேலைத்தேச மருத்துவக் கல்லூரியாகும். 1956 இல் இது இந்திய அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. இந்தியாவின் முதலாவது பிரித்தானிய கவர்னர் ஜெனரலாக விளங்கிய லோர்ட் வில்லியம் பென்ற்றிங் அவர்களால் கொல்கத்தா மருத்துவக்கல்லூரி 1835 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது இந்தியாவில் மட்டுமன்றி ஆசியாவில் தாபிக்கப்பட்ட மிகப் பழைமைவாய்ந்த மேலைத்தேச மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. சென்னை மருத்துவக் கல்லூரியும் 1835 இல் ஆரம்பிக்கப்பட்டது.
1852 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட கொல்கத்தா மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக் கட்டடம் ஒன்று ஆசியாவில் உள்ள மிகப்பழைமை வாய்ந்த மருத்துவமனைக் கட்டடமாகத் தற்போதும் விளங்குகிறது. அந்தக்கட்டடம் வெறும் தட்டையான சுவர்களால் கட்டப்படவில்லை. கட்டடக்கலையின் அழகியலே அதன் சிறப்பம்சம். யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கட்டடக்கலையின் அழகியலைக் கொண்ட எந்த ஒரு அரச மருத்துமனைக் கட்டடமும் கடந்த 100 வருடங்களில் கட்டப்படவில்லை.
மருத்துவர் கிறீன் 1848 இல் மானிப்பாயில் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரி அமெரிக்க மருத்துவ மிசனரிகளால் ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழைமைவாய்ந்த மருத்துவமனையாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்

# பலஸ்தீன ஹமாஸ் அமைப்பும் தமிழ்த்தேசியக் கட்சிகளும்

ரஷ்யா உக்ரைன் போர் நீடித்து வரும் நிலையில் அங்கு அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் என்பது பற்றிய கவலைகள் வெளியிடப்படுகின்றன. ஆகவே உலகின் கவனம் திசை திரும்பியுள்ள சூழலில், சர்வதேசக் கவனம் இருக்காது என்ற துணிவுடன், இலங்கை, மியான்மர் மற்றும் இஸ்ரேல் போன்ற அரசுகள் தத்தமது நாடுகளுக்குள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இன ஒடுக்கல் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

போரின் ஆரம்பத்தில் இருந்தே அணு ஆயுதங்கள் ரஷ்யாவுக்கு 'மேசையில்' இருந்ததாகவும், அமெரிக்காவையும் அதன் கூட்டாளி நாடுகளும் நேரடியாகப் போரில் ஈடுபடுத்துவதைத் தடுக்கும் வழிமுறையாகவே அணு ஆயுதங்களைத் தனது மேசையில் ரஷ்யா வைத்திருந்தது என்றும், அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் செர்ஜி காரகனோ கூறியதாக 'மொடேர்ன் டிப்ளோமேசி' (moderndiplomacy) என்ற ஆங்கில இணையத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை வெளியான கட்டுரை ஒன்றில் விபரிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தாது என்றும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோர் போரின் வெற்றியாளர்கள் அல்லர் என்றும் பேராசிரியர் செர்ஜி சுட்டிக்காட்டுகிறார்.

இந்தப் பின்னணியில்,ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தில் கேட்கப்பட்டஒரு கேள்விக்கு , அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான தத்துவார்த்த சாத்தியம் உள்ளது, ஆனால் இப்போது அவற்றைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று பதிலளித்துள்ளார்.

ஆகவே ரஷ்யா உக்ரைன் போர், உலகின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்துள்ள பின்னணியில், அணு ஆயுதப் பயன்பாடுகள், அதனைத் தடுக்கும் கோட்பாட்டு விளங்கங்கள் மற்றும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் வியூகங்கள் என்று பல பரிமாணங்களில் உரையாடல்கள் நடைபெறுகின்றன. சர்வதேச ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இவ்வாறு உலகின் கவனம் திசை திரும்பியுள்ள சூழலில் பலஸ்தீனம், குர்திஸ்தான் மற்றும் இலங்கைத்தீவின் ஈழத்தமிழர் போன்று இன விடுதலை கோரும் சமூகங்களின் விவகாரங்கள் சர்வதேச அரங்கில் பத்தோடு பதினொன்றாக மாறி வருகின்றன. இன ஒடுக்கல் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் இஸ்ரேல் தற்போது மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மிகவும் முக்கியமான ஒரு அரசியல் இராணுவ பலத்தைக் கொடுத்துள்ளது எனலாம். இதனைப் பக்கபலமாகக் கருதியே இஸ்ரேல் சில மாதங்களாக பலஸ்தீனியர்களின் மேற்குக் கரை மற்றும் காசா பகுதிகளில் இராணுவக் கண்காணிப்புகள் மற்றும் குடியேற்றங்களை அதிகரித்தும் வருகின்றது. 1948 இல் இருந்து நீடித்து வரும் இஸ்ரேல் - பலஸ்தீன மோதலை மேலும் அதிகரிக்கும் வகையில், மற்றொரு சம்பவம் சென்ற மூன்றாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. மேற்குக்கரைப் பகுதியில் ஜெனின் நகரில் உள்ள பலஸ்தீன அகதிகள் முகாமில் பல ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு மிகப்பெரிய அதிரடிச் சோதனையை இஸ்ரேல் இராணுவம் திங்கட்கிழமை நடத்தி உள்ளது.

இந்தச் சோதனையின்போது இஸ்ரேல் இராணுவத்துக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 10 பலஸ்தீனிய மக்கள் கொல்லப்பட்டனர். நூறு பேர் காயமடைந்தனர் என்று ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

ஆனால் இஸ்ரேல் அரசு மீது காரசாரமான கண்டனத்தை மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் வெளியிடவில்லை. மாறாக பலஸ்தீன ஹமாஸ் போட்டக் குழு மீதே கண்டனங்கள் எழுந்துள்ளன. சிறிய கண்டன அறிக்கையுடன் ஐக்கிய நாடுகள் சபையும் அமைதியாகிவிட்டது. ஏனெனில் ரஷ்யா உக்ரைன் போர்ச் சூழலில் இஸ்ரேல் உள்ளிட்ட பலம்மிக்க நாடுகள் மற்றும் இலங்கை போன்ற சிறிய நாடுகளின் முழு ஒத்துழைப்பு மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன.

இதன் காரணமாகவே இஸ்ரேல் என்ற பலம மிக்க அரசின், பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை வல்லரசு நாடுகள் தெரிந்தும் தெரியாதது போன்று பார்த்துக் கொண்டிருக்கின்றன. ரஷ்யாவின் அணு ஆயுதப் பயன்பாடுகள் உறுதியாக இருக்குமானால் ஐக்கிய நாடுகள் சபையில் அதற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும்.

அத்துடன் நேட்டோ இராணுவ அணி முழுமையாக உக்ரைன் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. இந்தப் பின்புலத்தில் ஒருங்கிணைந்த எதிரியை எதிர்கொள்ள ரஷ்யா எடுக்கப் போகும் மாற்று ஏற்பாடு என்பது, அணு ஆயுதமாக இருக்குமானால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்.

குறிப்பாக இலங்கை, மியான்மர் உள்ளிட்ட சிறிய நாடுகளுடன் இஸ்ரேல் போன்ற பலமுள்ள அனைத்து நாடுகளையும் ஒரு அணியில் சேர்க்க அமெரிக்கா முற்படும். இதில் இந்தியா எந்தப் பக்கமும் ஆதரவு வழங்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

இருந்தாலும் ரஷ்ய உறவை இந்தியா தொடர்ந்து பேணும் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. இந்தச் சூழலில், இன விடுதலை கோரி நிற்கும் இனங்களை அடக்கி வரும் இலங்கை போன்ற சிறிய அரசுகளுக்குத் தமது இன ஒடுக்கல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்த இலகுவான சந்தர்ப்பங்கள் கிட்டியுள்ளன



என்று கூறலாம். மியான்மர், இலங்கை போன்ற நாடுகள் தமது இன ஒடுக்கல் செயற்பாடுகளை ரஷ்யா உக்ரைன் போர்க் காலப் பகுதியில் தீவிரப்படுத்தி வருவதைக் கடந்த ஒரு வருடமாக அவதானிக்க முடியும்.

இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் கடந்த ஒரு வருடத்தில் விகாரைகள், புத்தர் சிலைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்துள்ளன. முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் பெருமளவு காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

முந்திரிக்குளம், எரிஞ்சகாடு, கொக்குமோட்டை, அக்கரைவெளி, ஆமையன்குளம் போன்ற பகுதிகளில் மூன்று கிராமத்து மக்களுக்குச் சொந்தமான ஆயிரத்து இருநூறு ஏக்கர் காணிகள் உள்ளன. இவற்றில், எரிஞ்ச காட்டுப் பகுதியில் மாத்திரம் 300 ஏக்கர் காணிகள் மக்களிடம் மீளவும் கையளிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் மன்னார், முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களில் காணிகளின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை இணைத்து விஸ்தரிக்க முற்படுவதால், காணிகள் பறிபோவதுடன் தமிழ் இன விகிதாசாரத்திலும் மாற்றம் ஏற்படும் ஆபத்துகளும் பகிரங்கமாகத் தெரிகின்றன. ' மகாவலி அபிவிருத்திக்காக "ஜே" வலயம் ஒன்றை உருவாக்கி அதன் ஊடாக 37 கிராமங்களைத் தமிழர்கள் இழக்கும் ஆபத்து ஏற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார். அதேவேளை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் பிரதேசத்தில் கடந்த வாரம் மனித எலும்புக்கூடுகள், எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதற்குரிய அகழ்வுப் பணி சர்வதேச விதிமுறை களுக்கு ஏற்ப இடம்பெறவில்லையென தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால் மன்னார் மாந்தைச் சந்தியில் இருந்து 75 மீற்றர் தொலைவில் திருக்கேதீச்சரம் கோவிலுக்குச் செல்லும் வழியில் 2014 பெப்வரவரி மாதம் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி பற்றிய விவகாரம் ஏற்கனவே மூடி மறைக்கப்பட்டுள்ளது.

அங்கு 58 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 2014 ஜனவரி மாதம் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம், சட்ட மருத்துவ நிபுணர் டி.எல். வைத்தியரட்ண மற்றும் பொலிஸார் முன்னிலையில் அப்போது நடைபெற்றன. மொத்தமாக 55 எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டு இவை மன்னார் பொது மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது அந்த எலும்புக் கூடுகளுக்கு என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியாது.

2014 ஒக்ரோபர் மாதம் இரண்டாம் ஆம் திகதி மன்னர் நீதிவான் ஆனந்தி கனகரத்தினத்தின் முன்னிலையில் மீண்டும் இருபதாவது தடவையாக புதைகுழி தோண்டப்பட்டபோது மேலும் மூன்று எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மொத்தமாக 58 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனாலும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதேநேரம் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மன்னார் நகரில் உள்ள 'சதொசா' அரச வியாபாரக் கட்டடத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு மனிதப்புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியில் சுமார் 325 மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அவை மேலதிக ஆய்வுக்காக அமெரிக்காவின் புளோறிடா மாநிலத்துக்கு அனுப்பி அறிக்கை பெறப்பட்டபோதும், இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட எலும்புக் கூடுகள் மாற்றப்பட்டு, மன்னர் கால எலும்புகளே அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டதாக மனித உரிமைகள் சட்டத்தரணிகள் சிலர் அப்போது சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

இந்தப் பின்னணியில் இது குறித்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது., 2018 இல் மைத்திரி - ரணில் அரசாங்கம் பதவியில் இருந்ததால் தமிழரசுக் கட்சி, மன்னார் சதொசா கட்டடத்துக்குக் கீழ் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் பற்றி அப்போது வாய்திறக்கவில்லை. 2014 இல் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் பற்றியும் அப்போது எதுவுமே பேசவில்லை. அப்போது மௌனிகளாக இருந்துவிட்டு, தற்போது முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழு சர்வதேச தரத்துக்கு ஏற்ப அகழ்வு செய்யப்படவில்லை எனக் குற்றம் சுமத்துவதில் என்ன நியாயம் உண்டு? முல்லைத்தீவில் இலங்கைப் படையினர் நிலைகொண்டுள்ள காணிகள் மற்றும் இராணுவ முகாம்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள விகாரைகளின் கீழ் மனிதப் புதைகுழிகள் காணப்படலாம் என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் சந்தேகிக்கிறார். ஆகவே 1950 களில் கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த மயமாக்கல் ஊடான தமிழ் இன அழிப்புச் செயற்பாடுகளின் தொடர்ச்சி, 2009 க்குப் பின்னரான சூழலில், அதாவது கடந்த 14 ஆண்டுகள் மிகத் தீவிரமாக முன்னெ டுக்கப்படு கின்றது என்பதற்குரிய சான்றுகள் இருக்கின்றன.

ஆனால் தப்போது ரஷ்யா உக்ரைன் போர்ச்சூழலில் அதுவும் சர்வதேசம் குழப்பமடைந்துள்ள நிலையில் , முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள், தமிழ் இன அழிப்புக்கான ஆதாரங்கள் என்று சர்வதேசத்தில் நிறுவக்கூடிய ஏதுநிலைக்ள் இருப்பதாகத் தெரியவில்லை.

2014 இல் மன்னார் திருக்கேதீச்சரத்திலும், 2018 இல் மன்னார் நகரிலும் கண்பிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் பற்றிய ஆய்வுச் செயற்பாடுகளைச் சர்வதேச ரீதியில் மேற்கொள்ள வேண்டுமென அப்போது பிரசாரப்படுத்தியிருந்தால், அதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மனிதப்புதை குழிகள் பற்றிய விடயத்தியிலும் சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருக்க முடியும்.

ரஷ்யா - உக்ரைன் போர்ச்சூழலின் பின்னரான சர்வதேச ஒழுங்கு என்பது எந்த நலன் அடிப்படையில் மாற்றமடையும் என்று தற்போதைக்குச் சரியாகக் கணிக்க முடியாது.

ஆனாலும் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதற்குரிய உத்திகளைத் தமிழ்த்தரப்பு தற்போதிருந்தே, ஒரு பொறிமுறையின் கீழ் திட்டமிட்டு வகுக்க முடியும். அதற்கான சூழல் இல்லாமல் இல்லை.

ஏனெனில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீன ஆதிக்கம் என்பது ரஷ்யா உக்ரைன் போரின் பின்னரான சூழலில் வேறொரு வியூகத்தில் மாறக்கூடிய நகர்வுகள் தென்படுகின்றன. இதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கும் சாத்தியங்களும் அதிகம்.

கடந்த திங்கட்கிழமை பலஸ்தீன அகதி முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் ஹமாஸ் அமைப்பு மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடியும்.

அதுவும் தற்போதைய ஹமாஸ் ஆட்சியாளர்கள் மீது பலஸ்தீனிய இளைஞர்கள் நம்பிக்கை இழந்து போராடி வரும் சூழலில் மாற்று ஏற்பாடுகளை ஹமாஸ் இயக்கம் கையாள ஆரம்பித்திருக்கிறது.

ஹமாஸ் அமைப்பு மீது நம்பிக்கை இழந்த இளைஞர்கள் குழு ஒன்று இஸ்ரேல் அரசுக்கு எதிராக ஜனநாயக வழியில் போராட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பி.பி.சி.உலக சேவையின் செய்தியாளர் யூசப் எல்டின் சென்ற ஜூன் மாதம் 17 ஆம் திகதி எழுதிய கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலஸ்தீனிய இளைஞர்களின் போராட்டம் வன்முறை அல்ல. மாறாக அது ஹமாஸ் அமைப்பின் செயற்பாடுகளைக் கடந்து ஜனநாயக வழியில் புதிய வியூகங்களை வகுத்துச் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்டம் என்று பி.பி.சி. செய்தியாளர் தனது கட்டுரையில் விபரித்துள்ளார்.

குறிப்பாக ரஷ்யா உக்ரைன் போரின் பின்னர் சர்வதேசக் கவனம் மாறும் சூழலில், இஸ்ரேல் மீது அரசியல் ரீதியாகக் கடும் நடவடிக்கை எடுக்கக் கூடிய பொறிமுறைகளை ஹமாஸ் அமைப்பு இப்போதிருந்தே தயாரித்து வருவதாக இஸ்ரேல் பலஸ்தீன ஆய்வாளர்கள் கூறியிருப்பதாக ரெட்பிஷ் என்ற ரஷ்ய டிஜிட்டல் ஊடகம் வெளியிட்டுள்ள தகவலையும், அங்குள்ள இளையோரின் போராட்டங்களையும் தமிழ்த் தரப்பும் கவனத்தில் எடுக்க வேண்டிய தருணம் இது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிதறிப்போன ஒரு மக்கள் கூட்டம் ?

நிலாந்தன்

காற்றுவழிக் கிராமங்களைப் பற்றிய எனது கடந்தவாரக் கட்டுரையானது பெருமளவுக்கு தீவக மக்களால் வரவேற்கப்பட்டிருக்கிறது. எனினும் ஒரு பகுதியினர் அதற்கு வேறுவிதமாக வியாக்கியானம் தருகிறார்கள். கோவில்களில் காசைக் கொட்டுவது என்பது ஒரு விதத்தில் ஊரில் தமது முதன்மையை நிலைநாட்டும் நோக்கத்தையும் கொண்டது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஒரு காலம் நீருக்கு கஷ்டப்பட்ட கிராமத்தில் இருந்து பொருளாதார மற்றும் போர்க் காரணங்களுக்காக ஊரை விட்டுப்போன மக்கள் இப்பொழுது அதே ஊரில் கற்பனை செய்ய முடியாத ஒரு தொகையைச் செலவழித்து ஒரு கோவிலைப் புனரமைப்பது என்பது, தங்களால் முடியும் என்பதனைச் சாதித்துக்காட்டும் ஒரு நிகழ்வாக ஏன் எடுக்கக் கூடாது என்றும் கேட்கப்படுகிறது. அதில் உண்மை உண்டு. புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாங்கள் தேடிய செல்வத்தை எப்படி ஊரில் செலவழிப்பது என்பதைக் குறித்து பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாத வெற்றிடத்தில்தான் கோவில்களில் முதலீடு செய்யும் ஒரு நிலைமை ஏற்படுகின்றது. கோவில்களைப் புனரமைப்பது என்பது அவர்களுடைய மத நம்பிக்கை சார்ந்த விடயம். ஆனால் ஊரின் பெருமையை வெளி உலகத்திற்கு காட்டுவது என்பது அதுவும் ஊர் என்பது ஊருக்கு வெளியே வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் சிதறிப்போயிருக்கும் ஒரு பின்னணியில், ஊருக்கு வெளியே இருக்கும் ஊரவர்களுக்கு தமது முதன்மையை, பெருமையை நிலைநாட்டுவது என்று பார்க்கும் பொழுது, அங்கே ஊரைக் கட்டியெழுப்புவதா அல்லது குறிப்பிட்ட கொடையாளி தன்னுடைய பெயரைக் கட்டியெழுப்புவதா என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பழைய மாணவர் சங்கங்களைப் போலவே ஊர்ச் சங்கங்கள் உண்டு. இச்சங்கங்கள் பல ஓரளவுக்கு ஊரைக் கட்டியெழுப்புகின்றன. ஆனால் அதனை ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற மையப்புள்ளியில் இருந்து சிந்தித்துச் செய்வதாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்க் கட்சிகளை போலவே ஊர் சங்கங்களுக்கிடையிலும் ஐக்கியம் இல்லை. ஒரே ஊருக்கு வெவ்வேறு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வேறு வேறு சங்கங்கள் உண்டு. அவற்றுக்கு இடையில் ஐக்கியம் இல்லை. புலம் பெயர்ந்த தரப்பில் உள்ள கொடையாளிகள் அல்லது சங்கங்கள் ஊருக்கு தாங்கள் செய்யும் நற்காரியங்களுக்குரிய பாராட்டுக்கள் தங்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று சிந்திப்பதும் ஒரு காரணம். அதில் ஓர் 'ஈகோ' உண்டு. ஆனால் அந்த 'ஈகோ'வை பொசிட்டிவான விதத்தில் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்வாங்கலாம். அதை யார் செய்வது? ஊர்ச் சங்கங்களை ஏதோ ஒரு பொது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யார் ஒன்றாக்குவது?

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும்பாலானவர்கள் ஊர் நினைவுகளை ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். ஒருவிதத்தில் ஊர்களையும் ஆங்காங்கே ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தாம் ஊரை விட்டுப்பிரிந்த காலத்தையும், ஊர் பற்றிய தமது நினைவுகளையும் ஊறுகாய் போட்டு வைத்திருக்கும் ஒரு சமூகத்தின் ஊர்ப்பற்று என்பது ஒரு தேச நிர்மாணத்தைப் பொறுத்தவரை அடிப்படையான ஓர் ஆக்க சக்தி. ஆனால் அதை ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் திரட்டப்பட்ட சக்தியாக மாற்றுவதற்கு தேச நிர்மாணம் என்ற அடிப்படையில் ஒரு பொதுவான வேலைத் திட்டம் இருக்கவேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான வேலைத்திட்டங்கள் எவையும் கிடையாது. ஒரு மையத்தில் இருந்து முடிவெடுத்து ஒரு மையத்திலிருந்து காசைத் திரட்டி அதை ஆக்கபூர்வமான பொருத்தமான வழிகளில் தேச நிர்மாணத்தை நோக்கி முதலீடு செய்வதற்கு தமிழ்மக்கள் மத்தியில் இப்பொழுது ஒன்றிணைந்த மையங்கள் கிடையாது. மாறாக சிதறிப்போன சிறு மையங்கள்தான் உண்டு. நாட்டில் ஒவ்வொரு கட்சியும் தனது வாக்கு வங்கியை எப்படிக் கட்டியெழுப்பலாம் என்று சிந்திக்கின்றதோ, அப்படித்தான். எனவே காற்றுவழிக் கிராமங்களில் கோவில்களைப் புனரமைக்கும் செயற்பாடுகள் நமக்கு எதை உணர்த்துகின்றனவென்றால், தமிழர்கள் தேவைகளையும் வளங்களையும் பொருத்தமான விதங்களில் இணைக்க முடியாத ஒரு மக்களாக, ஒரு மையத்திலிருந்து திட்டமிட முடியாத மக்களாகக் காணப்படுகிறார்கள் என்பதைத்தான்.

இதனைக் கோவில்களை புனரமைக்கும் விடயத்தில் மட்டுமல்ல, ஐ.நா.வை அணுகுவது; இந்தியாவை அணுகுவது; அமெரிக்காவை அணுகுவது; ஐரோப்பாவை அணுகுவது ; உலகப் பொது நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றை அணுகுவது போன்ற எல்லா விடயங்களிலுமே தொகுத்துக் காணலாம். தமிழ் மக்கள் ஒரு மையம் இல்லாத மக்களாகவும்; மையத்தில் இருந்து முடிவெடுக்காத மக்களாகவும் காணப்படுகிறார்கள். இதற்கு ஆகப்பிந்திய அண்மைய உதாரணங்களை இங்கே சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக, உலகத்தமிழர் பேரவை என்று புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு அண்மையில் அமெரிக்கப் பிரதானிகளைச் சந்தித்தது. அந்தச்சந்திப்பில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதானிகளை வைத்து பார்த்தால், அது ஒரு பெறுமதியான சந்திப்பு. ஜெனிவாக் கூட்டத்தொடரை முன்னிட்டு நடந்த அச்சந்திப்பானது புலம்பெயர்ந்த தமிழர்களை அமெரிக்கா ஏதோ ஒரு நோக்கத்தோடு கையாள விரும்புகிறது என்ற செய்தியை துலக்கமான விதங்களில் வெளிப்படுத்தியது.

இரண்டாவது, பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக அமைப்பாளர் அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்தமை. பிரித்தானியத் தமிழர் பேரவை அந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அதனை அவர்கள் உறவுப் பாலம் என்று அழைத்தார்கள். அது தொடர்பில் முக்கியமாக இரண்டு விமர்சனங்கள் எழுந்தன. ஒன்று பாரதிய ஜனதாவின் இந்துத்துவா நிலைப்பாட்டை மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பும் ஏற்றுக்கொள்கிறதா என்பது. இரண்டாவது பாரதிய ஜனதா பிரமுகர்கள் இப்பொழுதும் 13ஆவது திருத்தத்தைத்தான் ஒரு தீர்வாக முன்வைக்கிறார்கள் என்பது. அதாவது பாரதிய ஜனதாவை நெருங்கிச் செல்வதன்மூலம், ஈழத்தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் வெளியுறவு நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை என்பது. குறிப்பாக, பாரதிய ஜனதாவை இந்துத்துவா என்ற கொழுக்கி மூலம் கவர முயற்சிப்பதன் விளைவாக தாயகத்தில் எத்தனை இந்துக் கோவில்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது? அல்லது அடாத்தாகக் கட்டப்படும் எத்தனை விகாரைகளை அகற்ற முடிந்திருக்கிறது? என்றெல்லாம் அவர்கள் கேட்கிறார்கள்.

மூன்றாவது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் இயக்கம் என்று ஓர் அமைப்பு தொடர்ச்சியாக ஐ.நா. விவகாரங்களில் ஈழத் தமிழர்கள் சார்பாகச் செயற்பட்டு வருகின்றது. கடந்த பல ஆண்டுகளைத் தொகுத்துப் பார்த்தால் ஐ.நா.வில் ஈழத்தமிழர்களை அந்த அமைப்புத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்ற ஒரு தோற்றம் உண்டாகக்கூடும். அந்த அமைப்பின் யூடியூப்பில் காணக்கிடைக்கும் காணொலிகளிலும் அதை உணரக்கூடியதாக உள்ளது.

நாலாவது, லண்டனை மையமாகக் கொண்ட மூன்று அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்தியாவைக் கையாள்வது என்று ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை முன்வைத்து தொடர்ச்சியாக இந்தியாவில் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். இதுவரையிலும் மூன்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் தாயகத்திலிருந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்குபற்றி வருகிறார்கள். இந்த அமைப்பும் பாரதிய ஜனதாவை நெருங்கிச் செல்வதன் மூலம் ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று சிந்திப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுது மேற்சொன்ன அனைத்தையும் தொகுத்துப் பார்க்கலாம். இந்தியாவை அணுகுவது; அமெரிக்காவை அணுகுவது; ஐரோப்பாவை அனுப்புவது; ஐ.நா.வைக் கையாள்வது போன்ற அனைத்துமே வெளியுறவுச் செயற்பாடுகள்தான். அதாவது ஒரு வெளிவிவகாரக் கொள்கையை முன்வைத்து அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்கி அதன்மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள். வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு சக்தி மூலம் (Power source) ஏனைய சக்தி மூலங்களோடு இடையூடாடுவது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அப்படியான சக்தி மூலங்கள் கிடையாது. தாயகத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. மெய்யான சக்தி மூலங்கள் அவைதான். ஆனால் அந்தக்கட்சிகளிடம் வெளியுறவுக் கட்டமைப்பு எதுவும் கிடையாது. அவ்வாறு தாயகத்திலிருந்து பொருத்தமான வெளியுறவு செயற்பாடுகளை முன்னெடுக்கத் தேவையான வெளியுறவுத் தரிசனங்களோ கட்டமைப்புகளோ இல்லாத வெற்றிடத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் அல்லது தனிநபர்கள் அதை முன்னெடுத்து வருகிறார்கள். அவர்களுக்கிடையிலும் ஒன்றிணைப்பு இல்லை. அவர்கள் ஒரு வலு மையமாக இல்லை. இது ஒரு தலைகீழ்நிலை. அதாவது வெளியுறவுச் செயற்பாடுகளை யார் முன்னெடுக்க வேண்டுமோ அவர்கள் அதைச் செய்யவில்லை. அதற்குரிய கட்டமைப்புகளும் அவர்களிடம் இல்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போதிய செல்வம் உண்டு; மொழியறிவு உண்டு; தொடர்புகளும் உண்டு. அதைவிட முக்கியமாக, அவ்வாறான வெளியுறவுச் செயற்பாடுகளை வெளிப்படையாக முன்னெடுக்கத் தேவையான சுதந்திரமான வெளியும் அங்கே உண்டு. எனவே தாயகத்தில் செய்யாமல் விடப்பட்டதை அவர்கள் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இதில் மேலும் ஓர் உதாரணத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் எனப்படுவது ஒரு தனிநபர் பிரேரணைதான். அத்தனிநபர் பிரேரணையை முன்மொழிந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பின்னணியில் சில விரல்விட்டு எண்ணக்கூடிய கனேடியத் தமிழ்ச்செயற்பாட்டாளர்கள் காணப்படுகிறார்கள். நன்கு திட்டமிட்டு, தளராது, தொடர்ச்சியாக அவர்கள் உழைத்ததன் விளைவுதான் மேற்கண்ட தீர்மானம். அவ்வாறு தன்னை அர்ப்பணித்து செயற்படக்கூடிய ஆற்றலும் வளமும் பொருந்திய தமிழர்களும், அமைப்புகளும் உலகமெங்கும் உண்டு. ஆனால் அவர்களையெல்லாம் இணைப்பதற்கு ஒரு மையம் இல்லை. குறைந்தபட்சம் அவர்களைப் போன்றவர்கள் இடையூடாடுவதற்கு ஒரு மைய இடையூடாட்டத் தளங்கூட இல்லை. இதனால் திரட்டப்படாத தமிழ் உழைப்பும், வளங்களும் சிதறடிக்கப்படுகின்றன.

இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட காற்றுவழிக் கிராமங்களில் கோவில்கள் புனரமைக்கப்படுவதையும் மேற்கண்ட விளக்கத்தின் பின்னணியில் வைத்தே நோக்கவேண்டும்.

ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்டால் ஊர்ப்பற்றையும் பிரதேசப்பற்றையும் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொதுவான நிகழ்ச்சிநிரலை நோக்கி ஆக்க சக்தியாகத் திரட்டலாம். அங்கு தனிநபர் விம்பங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி நிரல் பின்தள்ளப்பட்டுவிடும். தாயகத்தில் உள்ள தேவைகளையும் புலம்பெயர்ந்த தரப்பில் உள்ள வளங்களையும் ஒருங்கிணைப்பது போன்ற அனைத்துமே கடந்தவாரக்கட்டுரையில் கூறப்பட்டது போல, தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு மைய நிகழ்ச்சிநிரலின் பிரிக்கப்படமுடியாத பகுதிகள்தான். ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவை ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்பட வேண்டும். ஆனால் மையம் இல்லாத தமிழர்களோ தலைகீழாகச் செயற்படுகிறார்கள்.

ஒருபுறம் வெளியுறவுச் செயற்பாடுகள். இன்னொருபுறம் ஊரின் பெருமையை நிலைநாட்டும் செயற்பாடுகள். ஆற்றல் மிக்க, அர்ப்பணிப்புள்ள, வளம்மிகுந்த தனிநபர்களும் நிறுவனங்களும் ஒரு மையத்தில் ஒன்றிணைக்கப்படாமல் சிதறிப்போய் தனித்தனியாக செயற்படுகின்றார்கள்.

முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகளுக்குத்தான் தாயகத்தைப் பிரிந்த பிரிவேக்கம் உண்டு. இறந்த காலத்தை ஊறுகாய் போட்டு வைத்திருப்பவர்கள் அவர்கள்தான். தாயகத்தில் கோவில்களைப் புனரமைப்பதும் அவர்கள்தான். அவர்களுடைய பிள்ளைகள் அதைச்செய்யாது. ஏனென்றால் அந்தத் தலைமுறையிடம் பிரிவேக்கம் கிடையாது. எனவே முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகள் வயதாகி இறப்பதற்கு இடையில் ஊர்ப்பற்றை நாட்டுப் பற்றாக்கும் நோக்கத்தோடு தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டங்களை வகுக்க வேண்டும். அதை ஒரு தொடர் செயற்பாடாக, பொறிமுறையாக நிறுவனமயப்படுத்தினால் அடுத்தடுத்த தலைமுறையும் அதில் முதலீடு செய்யும். தேசமும் பலமடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏன் மௌனம்?

○ குருமன்காட்டாள் வன்னிகா

இலங்கையின் மொத்தக்கடன் 83 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது. இதில் 41.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன். 42.1 பில்லியன் டொலர் உள்நாட்டுக் கடன்.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காகவே இலங்கை அதிக வெளிநாட்டுக்கடன்களைப் பெற்றுள்ளது. வெளிநாட்டுக் கடன்களின் மூலம் "ஆசியாவின் ஆச்சரியமாக" இலங்கையை மாற்ற "மஹிந்த சிந்தனை" முயன்றது.

2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை இலங்கை சீனாவிடம் அதிக கடன் பெற்றது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுக்கும் இடையில் இலங்கையின் ஒட்டு மொத்தக்கடன் மூன்று மடங்கால் அதிகரித்தது. வெளிநாட்டுக்கடன் இரண்டு மடங்காகியது. இலங்கை பெரும் பணச்செலவுடனான உட்கட்டுமானத் திட்டங்களை முன்னெடுத்ததே இதற்குக் காரணமாகும்.

அவ்வேளையில் நாடு காடுகளுக்கு நடுவில் பல மில்லியன் டொலர் செலவில் புதிய நவீன நகரத்தை உருவாக்க முயன்றது (இதற்குள் உலகின் மிகப்பெரிய வெறுமையான சர்வதே விமான நிலையமும் அடங்கும்). அதிக செலவுடன் நிர்மாணிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகளையும் இங்கு குறிப்பிடவேண்டும். மேலும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்திலிருந்து பிரமாண்டமான கற்பாறை ஒன்றை அகற்றுவதற்கு 42 மில்லியன் டொலர் செலவழிக்கப்பட்டது.

2015 ஆரம்பத்தில் ஆட்சி அமைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நிர்வாகத்தின்கீழ், உள்நாட்டுக் கடன் 12 வீதத்தினாலும், வெளிநாட்டுக் கடன் 25 வீதத்தினாலும் அதிகரித்தது. புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் ஆரம்பிக்காமலேயே இந்தக் கடன் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை வங்குரோத்துக்குட்பட்டு கடனை அடைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. முன்னைய கடன் ஒப்பந்தங்களின்படி இலங்கை அரசாங்கம், தமக்கு கடன் வழங்கிய வெளிநாடுகளின் அரசாங்கங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் முதலியவற்றுக்கு கடனை மீளச்செலுத்த முடியவில்லை. அவ்வாறே இலங்கை அரசாங்கம் தனது உள் நாட்டின் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனையும் அடைக்க முடியவில்லை. இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து பிணையெடுப்பதற்கு ஒரு சாத்தியமான தீர்வுமுயற்சி ஐ.எம்.எப் அனுசரணையுடனான கடன் மறுசீரமைப்பு முயற்சிகளே என தற்போதய அரசாங்கம் நம்புகிறது.

கடன் மறுசீரமைப்பு என்பதற்குள் நீண்டகடன் காலம்( கடன் செலுத்தவேண்டிய காலத்தை நீடித்தல்). பெறப்பட்ட கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைத்தல் அல்லது செலுத்த வேண்டிய தொகையில் குறைப்பு ஆகியவை அடங்கும். வெளிநாட்டுக் கடன் மறு சீரமைப்பும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பும் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டல்களை ஐ.எம்.எப். இலங்கைக்கு வழங்கியுள்ளது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு முன்னரேயே தொடங்கிவிட்டது. தற்பொழுது உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அமைச்சரவை, நாடாளுமன்றம் ஆகியவற்றின் அனுமதிகளும் பெறப்பட்டு நிதி அமைச்சரான ஜனாதிபதியினால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்கு விதிகள் அடங்கிய வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதி.அமைச்சு நாட்டின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான உத்தியோகபூர்வ கொள்கை அறிவிப்பில் ஏதேனும் கேள்விகள் மக்களிடம் இருந்தால் பொதுக் கடன் அத்தியட்சகருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு அழைப்பு விடுத்துள்ளது.

ddo.tbonds@cbsl.lk என்ற முகவரிக்கு திறைசேரிப் பத்திரங்களுக்கான பரிவர்த்தனைக் குறிப்பாணை மற்றும் ddo.sldb@cbsl.lk என்ற முகவரிக்கு இலங்கை அபிவிருத்திப் பத்திரங்களுக்கான பரிவர்த்தனைக் குறிப்பாணை தொடர்பான மின்னஞ்சல் மூலமான கேள்விகளை பொதுக் கடன் அத்தியட்சகருக்கு அனுப்ப முடியும்.

செவ்வாய்க்கிழமை ஜூலை 04 திகதியிட்ட அமைச்சு அறிவித்தலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவான பொருந்தக்கூடிய கேள்விகளுக்கான எந்தவொரு பதில்களும் அமைச்சகத்தின் **https://www.treasury.gov.lk/web/ddo** என்ற இணையத்தளத்தில் உடனடியாக வெளியிடப்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களை வழி நடத்தும் அரசியல் தலைவர்களும் அவர்களின் வழியில் செல்லும் தமிழ்மக்களும் இன்னமும் தெளிவாக கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் நிதி, பொருளாதார, சட்டஅடிப்படைகளை முதலில் விளங்கவேண்டியவர்களாகவுள்ளனர். அவற்றை இவர்கள் விளங்கிக் கொண்டால் மட்டுமே மேலதிக கேள்விகளை முன்வைக்க முடியும்.

இவ்விடயங்கள் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்களில் சிங்களமொழி பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடயங்களைப் படித்து ஆயத்தம் செய்து தரமான வகையில் கருத்துரைத்து வருகின்றனர். இலங்கையினதும் வெளிநாடுகளினதும் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும், ஆராய்ச்சிகளில் ஈடுபடும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பொருளியல் நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள். அத்தகைய நிபுணர்கள் எமது அரசியல்வாதிகளும் சாதாரண மக்களும் புரியக்கூடியதாக தமிழில் எழுதவும் பேசவும் கருத்துரைக்கவும் கலந்துரையாடவும் விரைவாக முன்வரவேண்டியது காலத்தின் அவசியமாகும்.

தவறும் பட்சத்தில் இலங்கையின் பொருளாதார மறு சீரமைப்பு தொடர்பான அறிவூட்டலும் அதன் அரசியல் தாக்கங்கள் பற்றிய புரிதலும் அற்ற 'வெ[illegible] நிறைந்த ஒரு சமூகமாக இலங்கைத் தமிழ்ச் சமூகம் மாறிவிடும் அபாயம் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



பு. ஜீவேந்திரன்
தரம் - 08
யா/இந்துக் கல்லூரி

# எறும்பும் மனிதனும்



சமூக வாழ்க்கை முறை உருவானதன் தொடர்ச்சியாக, எந்தெந்தச் சூழல்களில் மூளையின் அளவு அதிகரிக்கும், குறையும் என்பதை எறும்புகளின் உலகத்தை ஆராய்வதன் மூலம் தெரிந்துகொள்ளலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எறும்புகள் உலகத்தில் ஒவ்வோர் எறும்பும் குறிப்பிட்ட பணியைச் செய்கிறது. மனிதன் விவசாயம் செய்வது போலவே, சில வகை எறும்புகள் தமது புற்றில் பூஞ்சைகளை வளர்த்து, சாப்பிடுகின்றன. எறும்புகளின் சமூகத்தில் வேலைப்பிரிவினை காரணமாக அறிவு பகிரப்படுகிறது. ஒவ்வோர் எறும்பும் ஏதோ ஒரு வேலையைச் செய்ய, சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கிறது.

எனவே எறும்பின் மூளை இந்தச் சூழலுக்கு ஏற்ற மாதிரி அளவில் சற்றே குறைந்திருக்கிறது.

வேலைப் பிரிவினை, கூட்டு முடிவுகளை எடுத்தல் எறும்புகள் உலகத்துக்கும் மனித சமூகத்துக்கும் பொதுவானவை.



தீ.நயனிகா,
தரம் - 1c
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை






## அப்பா

சிறுவயதில் கரம் பிடித்து
நடைபயில சொல்லித் தந்து

கேட்பதற்கு இல்லை என்று
கூறாமல் அன்பையும்
வாரிக் கொடுத்தாரே

வேலை முடித்துவிட்டு வந்து
ஒரு சில நிமிடங்களாவது
எம்முடன் கழித்து
எம் முன்னேற்றத்தில்
பங்கு வகித்து
முன்னேற வழிப்படுத்தியவரே


தான் கஷ்டப்படினும்
எமக்கு கஷ்ட துன்பத்தை
தராமல் அதை நிராகரித்து
எம் வாழ்வில் விளக்கேற்றிய
அன்புள்ள தந்தையே

இறைவன் எமக்களித்த
வரமே எம் அப்பா...!

**ஷஸ்டிகா செந்துராஜ்.**
யா/வேம்படி மகளிர்
உயர்தரப்பாடசாலை.



A. யதிஸ்கா,
தரம் - 2C
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை




வ.அபிநயன்,
தரம் - 7
யா/இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 ஜூலை 2023



# முன்றில்


○ இயல்வாணன்

ஒரு அனுபவிக்கத்தக்க உணர்நிலைக்கூடாக வாசகரைக் கதைக்குள் இழுத்துச் செல்லும் மொழியும், நுட்பமான காட்சிச் சித்திரிப்பும், பல்வேறு பழக்கமற்ற உலகங்களை, பண்பாடுகளை இயல்பாக எம்முள் புகுத்தும் லாவகமும் நிறைந்த ஒரு சாகச எழுத்தாளராக நாம் அ.முத்துலிங்கத்தை அடையாளங் காணலாம். எளிமையான மொழிநடையில், இயல்பாகக் கதை சொல்லும் பாங்கு வாசகரை அவரது கதைகளுக்குள் இழுத்துச் செல்கிறது.

கனடாவில் வாழும் அ.முத்துலிங்கம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 19.01 1937இல் பிறந்த இவர் தனது பாடசாலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் நிறைவு செய்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து பட்டயக் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் படிப்பினையும் நிறைவு செய்தார். தென்னிலங்கை காலியில் நிறுவனமொன்றில் நிதிமுகாமைத்துவப் பணியில் இணைந்து கொண்டார்.

1972இல் ஆபிரிக்காவுக்குப் பணி நிமித்தம் சென்றார். அங்கு அரச நிறுவனங்களில் பணியாற்றிய அவர் பின்னர் உலக வங்கியிலும், ஐக்கிய நாடுகள் சபையின் சேவைத் திட்ட அலுவலகத்திலும் பல பதவிகளில் பணியாற்றினார். ஆபிரிக்க நாடுகள், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எனப் பல நாடுகளிலும் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அந்த இடங்களில் பெற்ற நிறைந்த அனுபவங்களே பின்னாளில் அவரது கதைகளில் தாக்கம் செலுத்தின.

14







பாடசாலைக் காலத்திலும், பல்கலைக்கழகக் காலத்திலும் எழுத ஆரம்பித்தாலும், 1958இல் 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளிவந்த கடைசிக் கைங்கரியம் சிறுகதையுடனேயே இவரது இலக்கிய பிரவேசம் நிகழ்ந்ததெனலாம். கல்கி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது அனுலா சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றது. தினகரன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் (1961) இவரது பக்குவம் சிறுகதை முதற்பரிசைப் பெற்றது. அக்காலகட்டத்தில் எழுதிய 10 சிறுகதைகள் அக்கா என்ற நூலாக (1964) பேராசிரியர் கைலாசபதியின் அணிந்துரையுடன் வெளிவந்தது.

அதன் பின்னர் அ.முத்துலிங்கம் அஞ்ஞாதவாசத்திலிருந்தார். அவரது தொழில் எழுதுவதற்கான வாய்ப்பை அவருக்கு வழங்கவில்லை என்பதை ஒரு நேர்காணலில் அவர் பதிவு செய்துள்ளார். வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு பண்பாடுகளை, வேறுபட்ட மனிதர்களைச் சந்தித்த இவர் அவற்றை மனதுக்குள் புடம் போட்டு 30 வருடங்களின் பின்னர் 1995இல் மீண்டும் ஒரு இலக்கியப் படைப்பாளியாக புத்துயிர்த்தார். 1995இல் வெளிவந்த திகடசக்கரம் சிறுகதைத் தொகுப்பு மூலம் இலக்கிய உலகில் மீண்டும் அறிமுகமாகி, இந்த இரு தசாப்த காலத்தில் 'நவீன தமிழின் கொடை' என இவரது எழுத்துக்களைப் பார்க்குமளவுக்கு விஸ்வரூபமெடுத்துள்ளார்.

வம்சவிருத்தி(1996), வடக்கு வீதி(1998), மகாராஜாவின் ரயில்வண்டி(2001), அ.முத்துலிங்கம் கதைகள் அதுவரையான முழுத் தொகுப்பு (2003), அமெரிக்கக்காரி(2009), குதிரைவீரன் (2013), கொழுத்தாடு பிடிப்பேன் தேர்ந்த சிறுகதைகள் க.மோகனரங்கன் தொகுத்தது(2015), பிள்ளை கடத்தல்காரன்(2015), ஆட்டுப்பால் புட்டு(2016) அ.முத்துலிங்கம் சிறுகதைகள் முழுத்தொகுப்பு இரண்டு பாகங்கள்(2016) என்பன இவரது ஏனைய சிறுகதைத் தொகுப்புகளாகும். இவரது சிறுகதைகள் ஒலிப்புத்தகமாகவும்(2008) கிழக்கு பதிப்பகத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

உண்மை கலந்த நாட்குறிப்புகள்(2008), கடவுள் தொடங்கிய.இடம்(2012) ஆகியன வெளிவந்த இவரது நாவல்களாகும். இவரது சிறுகதைகள் பத்மா நாராயணனால் மொழிபெயர்க்கப்பட்டு இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. Inauspicious Times (2008) After Yesterday (2018), Passwrd and Other Stories(2022) ஆகிய இரு தொகுப்புகளும் இவரது எழுத்துகளை ஆங்கில வாசகர்களுக்கு எடுத்துச் சென்றுள்ளன. இவரது கட்டுரைகளும் ஒரு கதை போல சுவாரஸ்யத்தை ஏற்படுத்துபவை. அங்கதச் சுவையோடு கட்டவிழ்பவை. அங்கே இப்ப என்ன நேரம் (2004), பூமியின் பாதிவயது (2007), கடிகாரம் அமைதியாக எண்ணிக் கொண்டிருக்கிறது(2006), அமெரிக்க உளவாளி(2010), ஒன்றுக்கும் உதவாதவன்(2011), தோற்றவர் வரலாறு(2016) ஆகிய இவரது கட்டுரை நூல்கள் வெளிவந்துள்ளன. அ.முத்துலிங்கம் கட்டுரைகள்(2018) என்ற பெருந்தொகுப்பும் இரு பாகங்களாக வெளிவந்துள்ளன. வியத்தலும் இலமே(2006), தமிழ்மொழிக்கு ஒரு நாடில்லை(2013) என்பன இவரது நேர்காணல்களின் தொகுப்பாகும். பிறமொழிப் படைப்பாளிகள் பலரை இவர் நேர்காணல் செய்திருப்பதும், இவரைப் பலர் நேர்காணல் செய்திருப்பதும் முக்கியமானதாகும். இவரது திகடசக்கரம் சிறுகதைத் தொகுதிக்கு லில்லி தேவசிகாமணி பரிசு(1995) கிடைத்தது. வம்சவிருத்தி சிறுகதைத் தொகுதிக்கு தமிழ்நாடு அரசின் முதற்பரிசு, இந்தியன் ஸ்டேட் வங்கியின் முதற்பரிசு(1996) என்பன கிடைத்தன. வடக்கு வீதி சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய விருதும் (1999), குதிரைக்காரன் சிறுகதைத் தொகுப்புக்கு சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விகடன் விருதும் (2012), அமெரிக்க உளவாளி கட்டுரைத் தொகுப்புக்கு திருப்பூர் தமிழ்ச் சங்க விருதும்(2012), அமெரிக்காகாரி சிறுகதைத் தொகுப்புக்கு எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் புலம்பெயர் தமிழர்களுக்கான தமிழ்ப் பேராய விபுலானந்தர் படைப்பிலக்கிய விருதும்(2013) வழங்கப்பட்டுள்ளன. கனடா தமிழர் தகவல் தமிழிலக்கிய சாதனை விருது (2006), கனடா மார்க்கம் நகரசபை இலக்கிய விருது(2014), கி.ராஜநாராயணன் இலக்கிய விருது(2022) என்பனவும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. சொல்வனம் இணைய இதழ்(பெப்ரவரி 2017), ஞானம் சஞ்சிகை(ஏப்ரல் 2018), காலம் சஞ்சிகை(மார்ச் 2005) என்பன சிறப்பிதழ்களை வெளியிட்டு இவரைக் கௌரவப்படுத்தியுள்ளன.

இவரது முதன்மைப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட கனடா இலக்கியத் தோட்டம்(2001) அமைப்பு ஆண்டுதோறும் சிறந்த படைப்புகளுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வாழ்நாள் சாதனையாளர்களுக்கும் (இயல் விருது) விருதளித்து வருகிறது. அத்துடன் உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடமிருந்து 6 மில்லியன் டொலர் நிதி திரட்டி அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை (2018) அமைப்பதில் பெரும் பங்காற்றினார். அந்த அனுபவங்களை காலைத் தொடுவேன் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாகவும் ஆக்கியுள்ளார்.

வாசிப்பின்பம் தரக்கூடிய படைப்புகளால் தமிழுக்கு அணிசேர்த்துள்ள முத்துலிங்கம் ஆயிரம் பிறை கண்டு 86 வயதிலும் தளராத தமிழ்ப்பணி ஆற்றி வருகிறார். கதைசொல்லலில் கி.ராஜநாராயணனுக்கும், குறைத்துச் சொல்லலில் அசோகமித்திரனுக்கும் தொடர்ச்சியாக இவர் உள்ளதாக ஜெயமோகன் இவரை மதிப்பிடுகிறார். உலகத் தமிழர்கள் பெருமைப்படக்கூடிய ஆளுமையாக அவர் இருப்பது ஈழத்தவரான எமக்கு பெரும் பேறே.

# யாழ்ப்பாண வரலாறு



1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

## 1939 டிசெம்பர்

இந்துசாதனம் பத்திரிகையின் பொன்விழா
இந்துசாதனம் பத்திரிகையின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. சிங்களத் தலைவர்களான சேர்.பரோன் ஜெயதிலக,டி.எஸ்.சேனநாயக்க ஆகியோரும் வாழ்த்துச்செய்திகளை அனுப்பியிருந்தனர். இந்து சாதனம் பத்திரிகை சிங்கப்பூர்,மலாயா,லண்டன் போன்ற இடங்களிலும் நிருபர்களை வைத்திருந்தமை குறிப்பி டத்தக்கது.

## 1940 ஜனவரி 28

சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்த தமிழ் லெக்சிக்கனுக்கு (தமிழ் அகராதி)பங்களிப்புச் செய்தமைக்காக நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கௌரவிக்கப்பட்டார். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலிருந்து வெண்புரவிகள் பூட்டப்பட்ட குதிரை வண்டியில் சோமசுந்தரப்புலவர் அழைத்து வரப்பட்டார். மாவட்ட நீதிபதி குமாரசாமி மற்றும் இலக்கிய கர்த்தாக்கள் நிகழ்வில் உரையாற்றினர். ஆளுநரும் வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பியிருந்தார்.

## 1940 ஜனவரி 28

மலாயா - உரும்பிராய் சங்கத்தின் இருபதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கோலாலம்பூர் தம்புசாமிப்பிள்ளை தமிழ்வித்தியாலயத்தில் மாலை 5.00 மணிக்கு இராசையா தலைமையில் நடைபெற்றது.சங்கம் நடத்திய 1939 ஆண்டுக்கான'பட்மின்டன்' சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்களை தலைவர் தம்பிப்பிள்ளை வழங்கினார். தம்பிப்பிள்ளை நடப்பாண்டுக்கான தலைவராகவும், பீதாம்பரம் உபதலைவராகவும், கார்த்திகேசு செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 1940 ஏப்ரல் 06

இந்துசாதனம் பத்திரிகை அப்போதைய அரசியல் சூழல் தொடர்பான கலந்துரையாடலொன்றை நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. R.R.நல்லையா,சாம் சபாபதி,C.பொன்னம்பலம் (நகரசபை தலைவர்), ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் கிறிஸ்தவ சபைகளின் பிரதிநிதிகள் உட்பட அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முக்கியமான பிரமுகர்கள் இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.50:50 கோரிக்கையை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் ஒன்றுபட்ட இலங்கையின் சுதந்திரத்துக்காக தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 1940 ஏப்ரல் 07

புங்குடுதீவுமலாயா ஐக்கிய சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் கோலாலம்பூர் விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெற்றது.தலைவராக மருத்துவர் கணபதிப்பிள்ளையும், செயலாளராக சின்னத்துரையும், பொருளாளராக ஐயம்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 1940 ஏப்ரல் 10

மலாயாஇலங்கையர் சங்கத்தின் எட்டாவது ஆண்டுப்பொதுக்கூட்டம் 10.4.1940 அன்று கீரிமலையில் நடைபெற்றது.நூறு பேர் கலந்து கொண்டனர். பொன்னம்பலம் தலைவராகவும்,விஜயரத்தினம் உபதலைவராகவும், தம்பிராஜா செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 1940 ஏப்ரல் 22

சோனகதெருவில்முஸ்லிம் பெண்களுக்கான மகப்பேற்று நிலையம் நகரசபைத் தலைவர் பொன்னம்பலத்தின் பாரியாரால் திறந்து வைக்கப்பட்டது.நகரசபை பிரதித்தலைவர் அபூபக்கர்,அரசாங்க அதிபர் பிரசாத் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## 1940 ஜூன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. பொன்விழா நிகழ்வுகளையொட்டி கைத்தொழில் வர்த்தகக் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 1941 ஜனவரி 27

அநுராதபுரம் நகரசபைத் தலைவராக தமிழரான நடராஜா ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டார்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org